கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(07.04.2019 - 07 சித்திரை 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 205, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

**திருத்தந்தையின் இம்மாத கருத்து**

போர்காலங்களில் பிறருடைய உயிர்களைக் காப்பாற்றும் மருத்துவர்கள், மனிதநேய தோழர்களுக்காக செபிப்போம்...

## போதைப்பொருளுக்கு எதிரான அமைதி பேரணி

# இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரையும் போதைப்பொருள் அரக்கனிடமிருந்து காப்பாற்றுவோம்.



## மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் உரை

போதைப் பொருளுக்கு எதிரான பேரணி பங்குனி மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு முகத்துவாரம் விஸ்ட்வைக் மைதானத்தில் நடைபெற்றது. வடகொழும்பு வட்டாரத்தில் கொட்டாஞ்சேனை பகுதிகளில் உள்ள பங்குகளும், முகத்துவாரம் லுனுபொக்குன பகுதியில் இணைந்து பேரணியாக விஸ்ட்வைக் மைதானத்தை நோக்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பாதாதைகளை தாங்கியவாறு முன்னோக்கி நகர்ந்தது. கிரேன்பாஸ் பகுதியில் உள்ள பங்குகள் இன்னுமொரு பேரணியாகவும், மட்டக்குளி பகுதிகளில் உள்ள பங்குகள் வத்தளை புனித அன்னம்மாள் ஆலயத்திலிருந்து வருகை தந்த பேரணியுடன் இணைந்து விஸ்ட்வைக் மைதானத்தை வந்தடைந்தனர். இப்பேரணியில் பொதுமக்கள், பங்குதந்தையர்கள், அருட்சகோதரிகள் என பலரும் கலந்துகொண்டனர். இங்கு திரண்டிருந்தவர்களிடம் அதிமேதகு மெல்கம் கர்தினல் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றுகையில், இன்று எமது நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் போதைப்பொருள் பாவனை ஊடுருவி உள்ளதைக் கண்கூடாக காணலாம். சிலரின் வாழ்வாதாரமாக போதைப்பொருள் விற்பனை மாறியுள்ளது. போதைப்பொருளை நாட்டிற்குள் இறக்குமதி செய்பவர்கள் மாத்திரமல்ல, சாதாரண மக்களின் நாளாந்த சம்பாத்தியத்திற்குரியதாக மாறியுள்ளது. இந்நிலை தொடரும்போது இலங்கையின் பொருளாதாரத்தில் வரவு செலவு திட்டத்திலும் இப்போதைப்பொருள் ஊடுருவுவதை தடுக்க முடியாத அபாயம் ஏற்பட்டுவிடும்....

தொடர்ச்சி 8ம் பக்கம்..

## ஆயர் குருக்களுக்கான கூட்டத்தில் கர்தினால் ஆண்டகை...

இவ்வருடம் இளைஞர் தலைமுறையினரை முன்கொண்டே எமது குறிக்கோள் அமைகிறது என அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கூறினார். இவ்வருடத்தில் எமது பிரதான குறிக்கோள் இளைஞர் தலைமுறையினரை முன்கொண்டாகும். கிறிஸ்துநாதர் எமக்குக் காட்டிய வழியில் அருட்பணியாளர்களாக பயணிக்கும்போது தனிப்பட்ட வாழ்வின் பரிசுத்தத்தன்மை மிக முக்கியமாகும். அருட்பணியாளர்கள் பரிசுத்தத்தின் முன்மாதிரியாளர்களாகவும் இயேசுவைப் பின்பற்றும் உண்மையாக பணியாளர்களாக, இளைஞர் பரம்பரையினருக்கு எந்நேரமும் உயிர்ப்பிக்கும் விதத்தில் முன்மாதிரியாளர்களாக வேண்டும் என ஆண்டகை கூறினார்.

## புனித வாரத்திற்குரிய புத்தகங்கள் விற்பனைக்கு

**புனித வாரத்திற்குரிய புத்தகங்கள்**

1. **வாசகர்களுக்கு :** முன்னுரை, சகல வாசகங்களும் விசுவாச மன்றாட்டுக்களும்
2. **குருக்களுக்கு :** சில அறிவுரைகள், பொது மன்றாட்டுக்கள், சகல நற்செய்திகளும்
3. **மூன்றாவது வாசகர் :** குருத்தோலை ஞாயிறும், பெரிய வெள்ளி

மூன்று புத்தகங்களிலும் குருத்தோலை ஞாயிறும் பெரிய வெள்ளி நற்செய்திகளும் உண்டு..

15

## கத்தோலிக்க அச்சகத்தின் உயிர்ப்புக் கால விடுமுறைகள்

**அன்பான வாசகர்களுக்கு!**

உயிர்ப்புக் கால விடுமுறைக்காக இம்மாதம் 13ம் திகதி தொடக்கம் 21ந் திகதி வரை கத்தோலிக்க அச்சகம் மூடப்பட்டிருக்கும். மீண்டும் 22.04.2019 அன்று வழமைப்போல் அச்சகம் திறந்திருக்கும்.

**இயக்குனர்**

குறிப்பு: எமது ஞான ஒளி பத்திரிகையானது சித்திரை மாதம் 7ம் திகதியும், 21ந் திகதி பத்திரிகையானது 14ம் திகதி பத்திரிகையாக உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழாக வெளிவரும். என்பதையும் அறியத்தருகின்றோம்.

**ஆசிரியர்**

## பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் – 2019

மேல்மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள, பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தலுக்காக விண்ணப்பிக்குமாறு 2019. 03.08ம் திகதி வெள்ளிக்கிழமை இலக்கம் 2,114 வர்த்தமானிப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டது. விண்ணப்பங்களை 2019.04.18ம் திகதிக்கு முன் **"செயலாளர், மேல்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல 109, மகா வீதி, பத்தரமுல்லை"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைக்கவும். பொருத்தமான தகமைகளைக் கொண்டிருக்கும் பட்டதாரிகள், இப்பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பார்கள் என நாம்....

15

## இலங்கை மக்களின் இதயத்தில் என்றும் வாழும் சிங்கள பாடகி அஞ்சலின் குணதிலக்க!



15

**என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன். (தி.பா 18)**

# தியாகத்தினூடாக இறைவழி செல்வோம்

## செத் சரண

இவ்வமைப்பானது கத்தோலிக்க திருச்சபையின் மற்றுமொறு அப்போஸ்தலிக்க சேவையாகும். இறை இயேசுவின் அன்பிய படிப்பினையின் நிமித்தமாகவும் கத்தோலிக்க அன்பிய சேவையினை வலியுறுத்தும் விதமுமாக செத் சரண நிறுவனமானது கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் நீதி, சமாதானம் மற்றும் மனித வள அபிவிருத்தி என்பவற்றை முறையாக கடைப்பிடிக்கும் அமைப்பாகவும் காணப்படுகின்றது. இச்சமூக சேவை அமைப்பானது கரித்தாஸ் இலங்கை செடெக் (SEDEC) கொழும்பு நிறுவனத்தின் கொழும்பு மாவட்ட கிளையாக செயல்படுகின்றது. இவ்வமைப்பானது கொழும்பு மறைமாவட்டத்தின் கம்பஹா மற்றும் களுத்தறை மாவட்டங்களை உள்ளடக்கியதாக செயற்படுகின்றது.

## செத் சரண சேவைகள்

செத் சரண எனும் பெயரிலேயே தம் சேவைகள் தங்கியுள்ளது. செத் என்பதால் அபிவிருத்தியை மேற்கொள்ளுதலை தமது பிரதான கடமையாகக் கொண்டுள்ளது. கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் உள்ள 134 பங்குகளில் உள்ள குறைந்த வருமானத்தை உடைய குடும்பங்களின் சமூக, பொருளாதார, கல்வி, சம்பிரதாய மற்றும் அரசியல் நிலைமையினை உயர்வதாகும். பங்குளில் செயற்படுத்தப்படும் சுயதேவை குழுக்களானது 3 வருடகாலமாக செயற்படுத்தப்படுகின்றது. அதிமேதகு மெல்கம் கர்தினால் ஆண்டகையின் வேண்டுகோளிற்கு இணங்க பங்குகளில் மனித அபிவிருத்தி சபைகளும் செத் சரண நிறுவனத்தினூடாக செயற்படுத்தப்படுகின்றது. அத்தோடு தோட்ட மக்களுக்கும், மீனவ சமுதாயத்திற்கும், சுயதொழில் செய்வோருக்கும் கூடிய கவனம் செலுத்துகின்றது. மேலும் சமாதானத்தை நிலைநிறுத்தல், சர்வ மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் என்பவை மேற்க்கொள்ளப்படுகின்றது.

## தவக்கால செயற்திட்டங்கள்

இந்நிகழ்வானது செத் சரண நிறுவனத்தின் பிரதான செயற்பாடாகும். வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்பாடானது "சரண" எனும் வார்த்தையை அர்த்தமுள்ளதாக்கவாகும். இத்தியாகங்களின் ஊடாக கல்வி, நோயுற்றோர், வாழ்க்கை பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்போர், போதைகளுக்கு அடிமையானோர் என்போருக்கு பயன்படும். 2019ம் ஆண்டின் தவக்கால ஞாயிறின் கருப்பொருளாக "தியாகத்தினூடாக இறைவழி செல்வோம்" என்பதாகும்.. இத்தவக்கால தியாகங்களை ஒன்றுதிரட்ட அவற்றை தவக்கால ஞாயிறன்று பங்குதந்தையிடம் கையளிக்கலாம். இளைஞருக்கான தொழிற்சார் வழிக்காட்டல், பயிற்சி மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோரின் சேவைக்காக பயன்படுத்தப்பட உள்ளது. உயர்மறைமாவட்டங்களின் பங்குகளுக்கு இந்நன்கொடைகள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளது.

## ஒத்துழைப்பு வழங்கும் முறை

உங்கள் நன்கொடைகளை
**கொமர்ஷல் வங்கி** பொரளை கிளை
இலக்கம் 1190030954
(Seth Sarana Caritas Colombo)
**ஹட்டன் நஷனல் வங்கி** மருதானை கிளை
இலக்கம் 10801011165
ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கலாம்.
மேலதிக தகவல்களுக்கு
Seth Sarana Caritas Colombo - 0112688999
என்ற இலக்கத்திற்கு தொடர்பை மேற்கொள்ளல்.

# இரத்தினபுரி பேராலய பாலர்சபை 30வது வருட கொண்டாட்டம்



கடந்த 2019.02.19 அன்று விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு கடந்த காலங்களில் பாலர் சபை இயக்குனர்களாக பணிபுரிந்த அருட்தந்தையர்களாக சிதத் விலேகொட (ஆயரின் செயலாளர்) போல் பெர்னாண்டோ, டோனி கப்பு ஆராச்சி ஆகியோர் விசேட வருகை தந்திருந்தனர். இவர்கள் பாலர்சபை மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து மகிழ்வித்தனர்.

தொடர்ந்து நடைப்பெற்ற திருப்பலியில் பங்கு அருட்தந்தை அருட்பணி எனஸ்லி சுரங்க அடிகளாரும் உதவிபங்குத்தந்தை அருட்பணி. மரியஜோய் அடிகளாரும் வருகை தந்து அனைத்து தந்தையர்களும் இணைந்துக் கொண்டனர். பதக்கம் அணிந்து கொண்ட மாணவர்களை படத்தில் காணுகின்றோம்.

# இரத்தினபுரி மறைமாவட்டம், தேசிய சர்வமத ஒன்றுகூடல்



கடந்த மாதம் 25ம், 26ம் திகதிகளில் இரத்தினபுரி மறைமாவட்ட கரிட்டாஸ் - செத்மனி நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி. என்டன் சிறியான் அடிகளாரின் ஏற்பாட்டில் இரத்தினபுரி "சமுதி" மண்டபத்தில் "சர்வமதங்களையும் பேணும் தேசம் நாமாவோம்" என்ற தலைப்பின் கீழ் ஒன்றுகூடல் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பதுளை, கண்டி, காலி, இரத்தினபுரி நான்கு மாவட்டங்களினதும் அங்கம் வகிப்போர் கலந்துகொண்டனர். மும்மொழிகள் பேசும் மக்கள் இணைந்து கொண்டனர். நான்கு மத தலைவர்களும் கலந்து கொண்டது மிக சிறப்பு அம்சமாகும். எதிர்வரும் காலங்களில் நாம் இன, மத, மொழி வேறுபாடின்றி நம் நாட்டை பேணும் மக்கள் ஆவோம் என உறுதி கொண்டனர்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**



பழைய பமுணுகம பங்கின் உறுப்பு பங்குகளான உஸ்வட்ட கியாவ, போப்பிட்டிய, கபுன்கொட பங்குகளுடன் பமுணுகம 143வது மடுமாதா திருவிழா; பங்குனி மாதம் 15ம் திகதி கொண்டாடப்பட்டது. உயர்மறைமாவட்ட துணைஆயர் மேதகு அன்ரனி ஜயகொடி ஆண்டகை, குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெரல் அன்ரனி ஆண்டகை, பமுனுகம பங்கு தந்தையர்கள், அருட்சகோதரிகள் பங்குமக்கள் அனைவரோடும் இணைந்து கொண்டாடப்பட்டது.

தவக்காலத்தில் கொண்டாடப்படும் இத்திருவிழாவில் ஆயத்த செயல்பாடுகள் அருட்தந்தை கிறிஸ்டி ஜயந்த அவர்களினால் நடத்தப்பட்டு மறையுரை அருட்தந்தை டயிடஸ் பொன்சேகா அவர்களாலும் வழிநடத்தப்பட்டது. பங்குனி 14ம் திகதி நற்கருணை எழுந்தேற்றம் பண்ணி பமுணுகம மக்களால் திருமணித்தியாலங்கள் தியானிக்கப்பட்டன. பிற்பகல் ஆயர்களினால் நற்கருணை பவனி ஆலயத்தைச் சுற்றி வலம் வந்தது. திருவிழா திருப்பலியின் பின் வரலாறு சிறப்புமிக்க செமாலை திருச்சுரூப பவனியும் ஆசீர்வாதமும் நடத்தப்பட்டது. மடுமாதா ஆலய பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சூசை அவர்களின் அனுசரணையுடன் நடைபெற்றது.

இத்திருவிழாவுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கிய பங்குமக்கள் அனைவருக்கும் பமுனுகமை ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவர் சனீ பொன்வீர அவர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றார்.

# இரத்தினபுரி மறைமாவட்ட தவக்கால திருவழிபாட்டிற்கான புதிய அணுகுமுறை



தவக்காலத்தில் திருவழிபாட்டு சடங்குகள் வழியாக கிறிஸ்துவின் பாஸ்கா மறைப்பொருளில் பங்கேற்கும் பொருட்டு இறைமக்களை ஆன்மீக ரீதியில் ஆயத்தம் செய்யும் நோக்குடன் திருவழிபாட்டு குழு அங்கத்தவர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு மறைமாவட்ட திருவழிபாடு மற்றும் கலாச்சார குழு இயக்குனர் அருட்பணி. என்டன் ஸ்ரீயான் அடிகளாரின் ஒழுங்கமைப்புடன் கடந்த மாசி மாதம் 22, 23 திகதிகளில் மறைப்பணி நடுநிலையத்தில் நடைபெற்றது.

சிங்கள மொழி மூலம் இயக்குனர் அருட்பணி. என்டன் ஸ்ரீயான் அடிகளார் கருத்தரங்கை வழிநடத்தியதுடன் தமிழ்மொழி மூலமாக அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளாரின் தலைமையின் கீழ் நடைபெற்றது. கருத்தரங்கின் இறுதியில் 2019.03.23ந் திகதி இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகையின் தலைமையில் இயக்குனர் அருட்பணி. என்டன் ஸ்ரீயான் அடிகளார், அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளார், மறைப்பாடசாலை இயக்குனர் அருட்பணி. ஜுட் அமில அடிகளார் மற்றும் மறைமாவட்ட குருவானவர்களின் பங்களிப்புடன் 2019ஆம் ஆண்டிற்கான முதலாவது செயலமர்வு சிறப்பாக நடைபெற்றது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்தின் 150வது யூபிலியை முன்னிட்டு நடாத்தப்பட்ட இளைஞர் ஆண்டிலே – இறை அழைத்தல் தினம் பற்றிய நிகழ்வுகளில் சில...



ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔළි

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
07 சித்திரை, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "புனித வெள்ளியன்று ஒரு சந்தியும் சுத்த போசனமும் கடைப்பிடிப்போம்"

நாமனைவரும் தவக்காலத்தின் இறுதி வாரத்தை அடைந்து அடைந்திருக்கின்றோம். இதற்கு அடுத்தவாரம் குருத்தோலை ஞாயிறு இந்ஞாயிறிலிருந்து தவக்காலம் முடிவடைந்து புனித வாரத்தில் நுழைகின்றோம். அனைத்து கிறிஸ்தவர்களும் முக்கியத்துவம் கொடுக்கும் வாரம் புனித வாரம். ஆலயத்தை எட்டிப் பார்க்காதவர்கள் கூட பயபக்தியாக வழிபாடுகளில் பங்குகொள்ளும் வாரம். இப்பரிசுத்த வாரத்திலே நடக்கும் முக்கிய வழிபாடுகள் பின்வருமாறு...

**குருத்து ஞாயிறு** பரிசுத்த வாரத்தின் தொடக்கம் இயேசுவின் பாடுகளைப் பற்றி தியானிப்பதால் இதனைப் பாடுகளின் ஞாயிறு என்றும் அழைப்பார்கள். இயேசுவின் பாடுகளைப் பற்றியும், அதற்குக் காரணமான நமது பாவங்களைப் பற்றியும் சிந்தித்து அதற்காகப் பரிகாரம் செய்யும், இரக்கச் செயல்களிலும், ஒறுத்தல் முயற்சிகளிலும், ஈடுபட்டு இறை உறவையும், மனித உறவையும், வலுப்படுத்தும் அருளின் காலமான தவக்காலத்தின் உச்சக்கட்டம் தான் இந்த பரிசுத்த வாரம்.

**பெரிய வியாழன்** இந்நாள் ஒரு மாபெரும் பொன்னாள். கிறிஸ்துவின் வாழ்க்கையிலே சிகரமெனத் திகழ்ந்திட்ட நாள். அதாவது ஆண்டாண்டு காலமாய் ஆண்டவரிமிருந்து எதிர்நோக்கிய மீட்பை இறைவன் எகிப்திய அடிமைத்தளையிலிருந்து இஸ்ராயேல் மக்களை விடுதலையாக்கியதை நினைவுக்கூறும் நாள். இந்தப் பொன்னான நாள்தான் நற்கருணையின் பிறந்த நாள். இயேசு தன் உடலையும், இரத்தத்தையும், நமக்காகக் சிந்தக் கொடுத்தது, தம் வாழ்வையே பலியாகக் கொடுத்தது, இந்த இரவிலேதான். நற்கருணையில் இயேசு தம்மையே கொடுத்து "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று சொல்லி குருத்துவத்தை ஏற்படுத்தியதும் இந்த இரவிலேதான். எனவே இன்று குருத்துவத்தின் பிறந்தநாளும்கூட. பணி வாழ்க்கை பரிசேய வாழ்கையல்ல என்று இயேசு உலகிற்கு எண்பித்த நாளும் இதுதான் என்பதை சீடர்களின் பாதங்களை கழுவி மாதிரி காட்டினார்.

இன்று உலக வரலாற்றிலே ஒரு சகாப்தத்தை உருவாக்க அடித்தளம் போடப்பட்ட நாள். நமக்கு வாழ்வு தர தமது வாழ்வையே முடித்துக் கொண்ட இறைமகன் இயேசுவின் இறப்பு விழா. பாவத்தினால் உருக்குலைந்து போயிருந்த மனித இனத்திற்கு இயேசு உயிர் கொடுத்த நாள் இந்த நாள். உலகம் தோன்றியது முதல் தமது பேரன்பை வெளிப்படுத்தி வந்த இறைவன், அன்பின் உச்சக்கட்டத்தை தொடுகின்றார். அன்பிற்கு ஒரு முழுமையான வரையறை உண்டென்றால் அது இயேசுவின் இறப்புதான். நமது மீட்புக்காக இயேசு பட்டப்பாடுகள் ஏராளம் அடிப்பட்டு, உதைப்பட்டு, உருக்குலைந்து, உடல் கிழிந்து இறுதியில் உயிர் துறந்து மீட்பை நமக்குப் பெற்றுத்தந்தார். இவற்றையே நாம் **பெரிய வெள்ளியன்று** தியானிக்கின்றோம். பெரிய வெள்ளிக்கிழமையை திருப்பாடுகளின் வெள்ளி என்று அழைக்கின்றோம்.

ஆகவே இப்புனித வாரத்தில் திருச்சபையின் கட்டளைப்படி புனித வெள்ளியன்று ஒரு சந்தியும் சுத்த போசனமும் கடைப்பிடித்து வெளி ஆடம்பரங்களுக்கு இடம்கொடாமல் இயேசு பட்ட பாடுகளைத் தியானித்து இயேசுவின் சிலுவை மரணத்தில் நாமும் பங்கெடுப்போம். இயேசுவின் மரணத்தோடு இணைந்து நம் பாவங்களுக்காக இயேசுவோடு உயிர்ப்போம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

"தவறு செய்வது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வ இயல்பு"

# மன்னிப்பு



குற்றம் செய்தவரைக் கருணையினால் பொறுத்துக்கொள்ளும் திறனே மன்னிப்பு. மற்றவர்கள் பால் இரக்கமும், கருணையும் உள்ளவராக நடந்து கொள்ளும் ஆற்றலை அது அளிக்கிறது. தவறிழைப்போர் அனைவரிடமும் இரக்க மனோபாவத்துடன் நடந்துகொள்ளுமாறு மன்னிப்பு தூண்டுகிறது. ஒருவரை தெய்வீகப் பணியில் பங்கு பெறுகிறவராக அது ஆக்குகிறது. மன்னிப்பு அளிப்பவர், பெறுபவர் ஆகிய இருவருக்கும், அது அருளாசியைக் கொண்டு வருகிறது. குற்ற மனதின் சுமையை மன்னிப்பு இலகுவாக்கி விடுகிறது. முறிந்துபோன உறவுகளை அன்போடும், பரந்த மனதோடும் அருளிரக்கத்தோடும், அது சீராக்குகிறது. உள்ளத்தை குணமாக்குகிறது. காயமுற்ற உள்ளத்தைக் கொண்டவர்கள் மீண்டும், சுயநன்மதிப்பு பெற அது உதவுகிறது. அது இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்க்கிறது. இன்பம், அமைதி, உள்ளம், குணமாதல், நல்ல மனம் ஆகியவற்றை மன்னிப்பு உருவாக்குகிறது.

ஒருமுறை உலகப் புகழ்பெற்ற ஓவியர் வியானார்டோ டாவின்சி இறையேசுவின் இறுதி உணவுச் சித்திரத்தை தீட்டிக் கொண்டிருந்தார். தமது சித்திரம் தீட்ட அழைத்து வந்திருந்த ஒரு மனிதர் மேல் அவருக்கு அடங்காக் கோபம் இருந்தது. அவர் மீது கோபம் பற்றி எறிந்தது. கடுங்சொற்களால் அவனை வசைப்பாடினார். அவனை வெளியே அனுப்பிவிட்டு மீண்டும் அவர் சித்திரம் தீட்டினார். இயேசுவின் முகத்தின் மீது மெல்லிய கோடுகளை வரைய முயன்றார். ஆனால் இயேசுவின் முகத்தோற்றத்தை மனக்கண்ணால் உற்று நோக்கி உருக்கொடுக்க இயலாதவாறு கவனம் சிதைந்தது. ஓவியம் தீட்டுவதை அப்படியே விட்டு விட்டு, தான் வசைமாறி பொழிந்த மனிதரிடம் மன்னிப்பு வேண்டுவதற்குப் புறப்பட்டார். அவரது கோபத்திற்கு இலக்கான மனிதர் டாவின்சியை மன்னித்து ஏற்றுக்கொண்டதாக உணர்ந்த பிறகுதான் அவர் மனச்சான்று சீராகியதாக உணர்ந்தார். மீண்டும் வந்து இயேசுவின் முகத்தை மனநிறைவோடு தீட்டி முடித்தார். ஆகவே, இத்தவக்காலத்தில்

## மன்னிப்பின் மதிப்பை பண்படுத்தி பயன் பெறுங்கள்.

1. பிறர்மீது குறைகூறிக் குவிக்கும் சோதனையை வெற்றி கொள்ளல்.
2. எமக்கு எதிராக குற்றம் செய்தவர்களை மன்னித்தல்.
3. நாம் தவறு செய்யும்போது, மன்னிப்பு கேட்க முந்திக் கொள்ளல்.
4. முரட்டுத் தனமும் திமிரானதுமான நடத்தையைத் தவிர்த்தல்.
5. சிந்தனை, சொல், செயல் ஆகிய அனைத்திலும் மன்னிப்பை கடைப்பிடித்தல்
6. பிறர் ஏற்படுத்திய உள்மனக் காயங்களை மன்னிக்க முயற்சி செய்தல்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# துன்பம் மனித வாழ்வின் தூய்மையா!!

ஒவ்வொரு ஆண்டும் புனித வெள்ளியன்று இயேசுவின் பாடுகள், இறப்பைப் பற்றிச் சிந்திக்கி-ன்றோம். நமக்காக இறைமகன் இயேசு துன்பங்களைத் தம்மேல் சுமந்து கொண்டதை நினைவு கூர்ந்து நன்றி கூறுகின்றோம். பாவமே இல்லாத இயேசு ஏன் துன்பங்-களை அனுபவிக்கவேண்டும்? இவ்வுலகில் துன்பம், வேதனை, இவற்றின் சிகரமாக சாவு; இவற்றின் பொருள்




என்ன? இவ்வினாக்களுக்கு விவிலிய வெளிச்சத்தில் விடை காண முயலுவோம்.

## பிற பார்வைகள்

***துன்பம் ஏன்?*** என்னும் அடிப்படைக்கேள்விக்குப் பலவிதமான விடைகள் தரப்பட்டுள்ளன. அரிஸ்டாடில், பிளேட்டோ போன்ற கிரேக்க அறிஞர்கள் உடலுக்குள் ஆன்மா அகப்பட்டுக் கொள்வதே துன்பம் என்றனர். புத்தர். ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்றார். முற்பிறவியின் கர்மா(வின்) விளைவே துன்பம் என்கிறது இந்துமதம். துன்பம் இயற்கையின் நியதி என்கின்றனர் பகுத்தறிவாளர்கள்.

## கிறிஸ்தவப் பார்வை

கிறிஸ்தவம் துன்பத்தை அணுகுகின்ற பார்வை கொஞ்சம் வித்தியாசமானது. சில பரிமாணங்களைக் கொண்டது. பழைய ஏற்பாட்டில் தொடங்கிய அதன் பயணம், புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சிலுவையில் நிறைவு பெறுகிறது. விவிலியம் காட்டும் அந்தப் பயணத்தின் சில படிக்கள் இதோ!

### 1. துன்பம் பாவத்தின் தண்டனை

விவிலியம் துன்பத்தை, துன்பத்தின் சிகரமான சாவினைப் பாவத்தின் தண்டனையாகப் பார்க்கிறதா? பாவத்தால்தான் சாவு இவ்வுலகில் நுழைந்ததாகக் கூறுகின்றார் புனித பவுல் (உரோ5:12) பொன்கன்றுகளை வழிபட்ட மூவாயிரம் இஸ்ரயேலர் கொல்லப்பட்டது பாவத்தின் தண்டனையாகத்தான் (வி.ப 32:1-28) எனவே ***பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு*** (உரோ 6:20-3) என்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் இந்த இறை வார்த்தையைப் புரிந்துகொள்வதில் ஓர் இறையியல் பக்குவம் தேவைப்படுகிறது. ***பாவம்*** என்பதனைத் தனி மனித பாவமாக மட்டுமல்லாது, மனித குலத்தின் சமூகப் பாவமாகவும் பொருள் கொள்ள வேண்டும். எனவே ***சாவு*** என்பதனை உடற்சாவாக மட்டுமன்று, ஆன்மாவையும் உள்ளடக்கிய முழு மனித, முடிவற்ற சாவாகவும் பொருள்கொள்ள வேண்டும். **எனவே, மாசற்ற ஒரு குழந்தை இறக்கும்போது, அந்த மரணம் அக்குழந்தையின் பாவத்தின் தண்டனை அல்ல, மாறாக மனித இனத்தின் சமூகப் பாவத்தின் விளைவு என்றே பொருள் கொள்ள வேண்டும்.**

### 2. துன்பம் பாவத்தின் விளைவு

இவ்வாறு, துன்பமும் சாவும் பாவத்தின் தண்டனை என்ற கோணத்திலிருந்து விலகி, அவற்றைப் பாவத்தின் விளைவாகவும் விவிலியம் காண்கிறது. ஆதாமும், ஏவாளும் செய்த பாவத்தின் தண்டனையாக அருளுயிரை இழந்து இன்பவனத்திலிருந்து துரத்தப்பட்டனர். (தொ.நு 3:22-24) அந்தப் பாவத்தின் விளைவாகவே துன்பமும், துயரமும் மனித இனத்தில் தொடங்கின. தந்தையின் பாவங்களால் பிள்ளைகள் துன்பம் அனுபவிப்பதும் பாவத்தின் விளைவே (வி.ப.34:7; 2சாமு 12:13-15) **குழந்தைகளுக்கு நாம் திருமுழுக்கு வழங்கும் போது, சமூகப் பாவத்தின் விளைவிலிருந்து அவர்களை விடுவிக்கிறோம்.**

பாவத்தின் தண்டனை, பாவத்தின் விளைவு இரண்டுமே துன்பச் சூழ்நிலையை முழுமையாக விளக்குவதில்லை. நல்ல மனிதர்களுக்குத் துன்பம் ஏன்? என்ற கேள்விக்கு இவை விடையளிப்பதில்லை. இந்தக் கேள்வியுடன்தான் நீதிமான் யோபு போராடினார். யோபு நூல் முழுவதும் இக்கேள்விக்கு விடை காணும் ஒரு போராட்டமே. இப்போராட்டத்தின் வியப்பான விடை சில காரணங்களை முன்னிட்டு நல்லவர்களுக்கும் இறைவன் துன்பத்தை அனுமதிக்கிறார் என்பதே.

### 3. இறைவனின் திருவுளப்படி துன்பம்

சில நேரங்களில் ***நல்லவர்களும் துன்பம் அனுபவிப்பது கடவுளின் திருவுளப்படியே*** என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. (1பேதுரு 4:19). அதற்கான சில காரணங்களையும் முன் வைத்திருக்கின்றது.

**திருந்தி வாழ:**

***திருத்தப்படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ?*** (எபி.12:7), (நீ.மொ.3:11-12, யோபு 5:17)

**விசுவாசம் ஆழப்பட:**

***உங்கள் நம்பிக்கை மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள்*** (1பேதுரு 1:-7)

**அதிக பலன்தர:**

கோதுமை மணி போலவும் (யோவான் 12:24) தீயில் புடமிடப்பட்டு ஒளிரும் பொன்போலவும் (1பேதுரு 1:7) துன்ப நேரத்தில் நல்லவர்கள் அதிக பலன் தருவார்கள் என்பதுவும் இறைவனின் திருவுளமே.

**பேறுபெற்றவர்களாகத் திகழ:**

***துன்பத்தில் நீங்கள் சோதிக்கப்படும் போது நீங்கள் பேறுபெற்றவர்கள்*** (1பேதுரு 4:12;5:1;4:16-17), புனித மத்தேயு 5:11)

**கடவுளின் மாட்சி வெளிப்பட:**

பிறவியிலேயே பார்வையற்றுப் பிறந்த மனிதரின் துன்பத்துக்குக் காரணம் அவர் செய்த பாவமும் அல்ல; அவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல; ***கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தார்*** (யோவான் 9:3) என்ற இயேசு இறைத்திருவுளத்தின் இன்னொரு கோணத்தையும் வெளிப்படுத்தினார்.

### 4. இயேசுவின் சிலுவை – மீட்பின் பாதை

மேற்கண்ட அனைத்து விளக்கங்களும் நிறைவு பெறுவது இயேசுவில்தான். இயேசு கிறிஸ்துவின் சிலுவைச்சாவு பாவத்தின் தண்டனை அல்ல; விளைவு-மல்ல, மாறாக இறைத் திருவுளத்தின்படி அவரே விரும்பி ஏற்றுக்கொண்ட துன்பம், ***அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்'*** என்னும் எசாயாவின் (53:4) இறைவாக்கின் நிறைவு, நாம் வாழ்வு பெறுவதற்காக சிலுவையை விரும்பி ஏற்றுக்கொண்ட இயேசு துன்பம் ஒரு சாபமல்ல, மீட்பின் வழி என்று புரியவைத்தார்.

இவ்வாறு, ***யூதருக்குத் தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாய்*** இருந்த அவமானத்தின் அடையாளமான சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து, ***கடவுளின் வல்லமையும் ஞானமுமாய்*** அதை மாற்றினார் (1கெரி 1:23-24) பிறர் வாழ்வு பெற, துன்பங்களை விரும்பி ஏற்கும்போது அது சுகமான சுமையாகிறது என்பது புதிய ஏற்பாடு காட்டும் பாடம்.

தலைவன் காட்டிய மீட்பின் பாதையில் தொடக்க

> **துன்பத்தில் நீங்கள் சோதிக்கப்படும் போது நீங்கள் பேறுபெற்றவர்கள்**

முதல் இன்றுவரை திருச்சபையும் நடைபோட்டது.

எத்தனையோ மறைசாட்சியர், புனிதர்கள் கிறிஸ்துவுக்காக, பிறருக்காகத் துன்பங்களை ஏற்க முன்வந்தனர். '***கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள்*** 1பேதுரு 4:13) எனும் இறைவார்த்தையின்படி முதல் மறைசாட்சியான ஸ்தேவான் (தி.பா 7:60) முதல் எளியவரின் உரிமைக்காகப் போராடி உயிர் நீத்த பேராயர் ரொமேரோ வரை எண்ணற்ற மாமனிதர்கள் துன்பங்களை ஏற்க முன்வந்துள்ளனர். இவ்வாறு துன்பம் சாபமாக இருந்த நிலைமாறி, இறையருளின் வாய்க்காலாக மாறிய புதிய பார்வையை இயேசுவின் சிலுவை தந்தது.

**எச்சரிக்கை**

அதற்காக எல்லாத் துன்பங்களையும் நாம் விரும்பி அரவணைக்க வேண்டும் என்பது பொருளல்ல.



தேவையின்றி தனக்கு துன்பத்தை வருவித்துக்கொள்வது ஓர் உளவியல் நோய் (Masochism) தவிர்க்கக் கூடிய துன்பங்களைத் தவிர்க்க வேண்டும். எதிர்க்க வேண்டியவற்றை எதிர்க்க வேண்டும். நோய் வந்தால் மருத்துவரிடம் செல்ல வேண்டும். இயற்கையின் சீற்றங்களை, ஆபத்துக்களை, விபத்துக்களை,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

### இயேசு சுமந்த சிலுவையின் துண்டு!

இயேசுநாதர் தமது தோளில் சுமந்து சென்று, ஆணியில் அறையப்பட்டு உயிர் தியாகம் செய்த சிலுவை மரத்தின் புனித துண்டு ஒன்று தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு ஆலயத்தில் இன்றும் ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஆலயத்திற்கு புனித சிலுவை மரத்தின் தண்டு வந்து சேர காரணமாக இருந்தவர் பங்குதந்தை ஜோன் சேதலனோலா அடிகளார்.

1581ம் ஆண்டு இந்த ஆலயத்தின் பங்கு தந்தையாக இருந்த அவர், உரோம் நகரில் இருந்த இயேசு சபை தலைமை குருவான இனாடியஸ், ஆக்குலா வீலா அடிளாருக்கு புனித சிலுவையின் சிறுபகுதி வேண்டி விண்ணப்பம் செய்தார். அந்த விண்ணப்பத்தை தலைமைக்குரு திருத்தந்தை பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார்.

திருத்தந்தையும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட மரத்துண்டின் சிறிய பகுதியை சிலுவை வடிவில் கொடுத்தார். அதை தலைமை குரு மணப்பாடு ஆலயத்திற்கு அனுப்பிவிட 1583ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அந்த புனித சிலுவையின் துண்டு தூத்துக்குடி மணப்பாடு ஆலயத்திற்கு வந்தடைந்தது. அந்த புனித சிலுவையை இன்று வரை பக்தியுடன் பாதுகாத்து வருகின்றனர்.

# ஆற்றல்

புத்துலகம் படைக்க புதிய ஆளுமையை அருள்கிறார் ஆண்டவர் இயேசு எனப் பார்த்தோம். இந்த ஆளுமைக்குள் அடங்கிக் கிடக்கும் ஆற்றல் அளப்பரியது. அந்த அளவிட முடியாத ஆற்றலே புத்துலகம் படைக்கத் துணைபோகிறது. இவ்வாற்றல் உள்ளிருந்து பிறக்கிறது? அதன் தன்மை என்ன? அதை எவ்வாறு பெற்றுக்கொள்வது? என்பனவற்றைக் காண்போம்.

நம் எல்லாருக்கும் அறிமுகமான ஓர் உதாரணம், நம்மிடம் அளவிட முடியாத ஆற்றல் இருப்பதாகக் காட்டுகிறது. இரவு தூங்கச் செல்லும்போது அதிகாலையில் 5 மணிக்கு எழ வேண்டும் என நினைத்துக்கொண்டு படுத்தால் காலையில் முன்புமல்ல பின்புமல்ல சரியாக 5 மணிக்கு நாம் எழுந்துவிடுகிறோம். யாரும் நம்மை எழுப்பிவிடவில்லை. வெளியேயுள்ள எவ்வித தூண்டுதலும் இதில் ஈடுபடவில்லை. எனவே நமக்குப் புலப்படாத ஒரு சக்தி நமக்குள்ளே இருந்துகொண்டு நம்மை இயக்குகிறது என்பது தெளிவாகிறது.

இது என்ன சக்தி? அறிஞர்கள் இதைப் பின்வருமாறு விவரிக்கின்றார்கள். முதலில் எழவேண்டுமென நினைத்தல். இரண்டாவது சரியான நேரத்தில் எழுதல் ஆகிய இரு மனித ஆற்றல்கள் இங்கே இனங்கண்டு கொள்ளப்பட்டன. முதலிலுள்ள நினைத்தலை மேல்மனம் எனவும் இரண்டாவதுள்ள எழும்புதலை அடிமனம் எனவும் பெயரிட்டுள்ளனர். மேல்மனம் 5 மணிக்கு எழக் கட்டளை கொடுக்கிறது. அடிமனம் அதை அப்படியே நிறைவேற்றுகிறது. இவ்விரண்டையும் முறையே காண்போம்.

மேல்மனம் கொடுக்கும் கட்டளை எவ்விதத்திலும் அமையலாம்: நினைத்தல், விரும்புதல், தீர்மானித்தல், ஆணையிடுதல், கட்டளை எந்த வடிவில் இருந்தாலும் முறையானதாக, சரியானதாக, திட்டவட்ட தீர்மானமாக இருக்கவேண்டும். உதாரணமாக, கட்டாயம் பாஸ் பண்ண வேண்டுமென்பவர்கள் பாசாகிவிடுகிறார்கள். அரை குறையாய் விரும்புவர் பாசாகவோ பெயிலாகவோ செய்யலாம். பாஸ் பண்ணாவிட்டாலும் பரவாயில்லை என நினைப்பவர்கள் நிச்சயமாகப் பெயிலாகி விடுவார்கள். எனவே நமது வெற்றியும் தோல்வியும் நமது தீர்மானத்தில் அமைந்திருக்கிறது. தீர்மானத்தை நிறைவேற்றுவது அடிமனம்.

அடிமனம் மேல்மனம் கொடுத்த கட்டளையை அணுவளவும் மாற்றாமல் நிறைவேற்றுகிறது. மேல்மனத்தை இரயில் ஓட்டுனருக்கு ஒப்பிட்டால் அடிமனத்தை இரயில் என்ஜினுக்கு ஒப்பிடலாம். இரயில் என்ஜினுக்கு அளவுக்கதிக ஆற்றல் இருப்பது போல் அடிமனத்திற்கும் வரையறை இல்லாத ஆற்றல் உண்டு. அதனுள் எதையும் சாதிக்கக்கூடிய சக்தி இருக்கிறது. அந்த சக்தியைக் கொண்டு அடிமனம் கண்மூடித்தனமாக எதையும் நிறைவேற்றிவிடும். நாம் நன்மையை நினைத்தால் நன்மையை நிறைவேற்றும். தீமையை நினைத்தால் தீமையைச் செய்துவிடும். செயலற்று நிற்க வேண்டுமெனில் அது செயலிழந்து நிற்கும். எனவே அடிமனம் இயங்குவதும் இயங்காதிருப்பதும் அவரவர் கொடுக்கும் கட்டளையைப் பொறுத்தது.

அடிமனத்தை இயக்கியதற்குச் சிறந்த உதாரணம் பன்னிரு ஆண்டளவாக உதிரப்பெருக்கினால் உபாதைப்பட்ட பெண்மணி. அவள் 'ஆண்டவர் ஆடையின் விளம்பைத் தொட்டால் குணம் பெறுவேன்' எனத் தனக்குள் சொல்லிக்கொண்டாள். இவ்வாறு மேல் மனம் கட்டாயமான கட்டளையைக் கொடுக்கிறது. அவளுக்குள்ளே வாசம் செய்கிற அளவிடமுடியாத அடிமனம் அவளைக் குணமாக்குகிறது. இங்கே இயேசு யார் என்னைத் தொட்டது எனக் கேட்கிறபடியால் யாருக்குச் சக்தி போனதென அவருக்குத் தெரியாது. ஆகவே அவள் குணம் பெறுவதற்கு முழுக்க முழுக்கக் காரணம் அப்பெண்மணியே. எனவே அவளுடைய மேல் மனம் நினைத்ததை அடிமனம் சாதித்துக்காட்டியது. இதற்கான விவிலியச் சான்றுகளைக் காண்போம்.

விசுவசிப்பவர்க்கு எல்லாம் கைகூடும் (மாற் 9:23) விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய மனம் தளராத நிலை (எபி 11:1) விவிலிய விசுவாசக் கோட்பாடுகளுக்கிணங்க வாழ்ந்து பேறு பெற்றவர் மரியா.

விவிலிய விளக்கம் மேல்மனம் அடிமனக் கூற்றை உறுதிப்படுத்துகிறது. கண்ணுக்குப் புலப்படாததை விசுவசித்து நம்பிக்கையுடன் எதிர்பார்த்ததால் மரியா வாழ்வின் மலைகள் பெயர்ந்தன. நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது எவற்றையெல்லாம் கேட்டீர்களோ அவற்றைப் பெற்றுவிட்டீர்கள் என நம்புங்கள்; நீங்கள் கேட்டபடியே நடக்கும் (மாற் 11:24) இதன்படி அடிமனத்தில் அடங்கிக் கிடக்கும் சக்தியை அன்னை மரியா ஆணையிட்டு வெளிக்கொணர்ந்துள்ளார். வெற்றியும் பெற்றுள்ளார்.



அடிமனச் சக்திக்குச் சில உதாரணங்கள்: தவளை ஒரு குழிக்குள் விழுந்துவிட்டது. என்னைத் தூக்கி விடுங்கள் என அழுது கொண்டேயிருந்தது. ஒருவரும் உதவிக்கு வரவில்லை. திடீரென ஒரு பாம்பு உள்ளே குதித்தது. படாரென வெளியே குதித்தது தவளை. தவளையின் உள்ளேயிருந்ததுதானே சக்தி வந்திருக்கிறது? இதுபோன்று இரண்டாம் உலகப் போரில் தன்னைத் துரத்திக் கொண்டு வருபவனிடமிருந்து தப்பிக்க அருகில் கிடந்த மிதிவண்டியை ஓட்டிக்கொண்டு தப்பித்தான். இதுவரை வண்டியை ஓட்டிப்பழகாதவன் ஓட்டியது அதிசயம். இந்த சக்தி எங்கே உதயமானது? உள்ளத்தினுள்ளே உறைந்து கிடந்த சக்தியை வெளிக்கொணர்ந்ததால் டென்சிங், கிலாரி, நெப்போலியன், ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின், சர்ச்சில் போன்றவர்கள் புகழ்பெற்றார்கள். இனி அடிமனச் சக்தியை வெளிக்கொணர்ந்த சிலரை பற்றிப் பார்ப்போம்.

காந்தி இளம் வயதில் தம் அடிமத்திலுள்ள ஆற்றலைத் தோண்டி எடுத்தார். மது அருந்தினார். மாமிசம் உண்டார். பொய் சொன்னார். இவை மனச்சான்றை உறுத்தியது. ஒரு தாளிலே எழுதி தந்தையிடம் கொடுத்தார். தந்தை திட்டவில்லை. அடிக்கவில்லை. அமைதியாகக் கண்ணீர் உகுத்தார். இது காந்தியின் அடிமனதைத் தொட்டது. அகிம்சைக்குத்தான் அதிக சக்தியென அறிந்தார். இன்று உலகுக்கே அவர் செய்தியை விடுக்கிறார்; அகிம்சையால் அகிலத்தையே வெல்லலாம்.




இதுபோன்று அடிமனச் சக்தியைப் பயன்படுத்தியவர் ஐசனோவர். அமெரிக்க அதிபராகி உலகையே மாற்றியர். இளமையில் தம் மூத்த சகோதரரோடு வீதியில் விளையாட விரும்பினார் தந்தை அனுமதிக்கவில்லை. கோபத்தில் வீட்டின் பின்புறமுள்ள ஆப்பிள் மரத்தை வெட்டினார். தந்தை அவரை அறையினுள் பூட்டி வைத்தார். அவரது தாய் காதுக்குள் மெதுவாக 'ஒரு நாட்டை வெல்பவனைவிட தன் உணர்ச்சிகளை வெல்பவனே சிறந்தவன்' எனச்சொன்னார். அவரது 76வது வயதில் அவரை வின்ஸ்டன் சச்சில், சார்லஸ் டி கால், பிராங்ளின் ரூஸ்வெல்ட் ஆகியோரைவிட உயர்ந்தவர் எனப் பாராட்டினர். அப்போது ஐசனோவர் இத்தனை புகழுக்கும் காரணம் தம் தாய் கற்றுக்கொடுத மந்திரம் என உறுதிபடக் கூறினார்.

அமெரிக்காவில் டெஹராய்டில் பிறந்து உலகப்புகழ்பெற்ற நரம்பியல் வல்லுனரான பென் காசன், இளமையில் தந்தையை இழந்து தறுதலையாக வாழ்ந்தவர். ஒழுங்காகப் படிக்க மாட்டார். எவரையும் இரத்தம் சொட்ட அடித்துவிடுவார். என்ன செய்வதென இவருடைய தாய் சோனியா காசனுக்குத் தெரியவில்லை. பென்னிக்கு TV பார்ப்பதில் ஆசை. வாரத்திற்கு ஒரு புத்தகம் படித்தால்தான் TV என்று சொல்லிவிட்டாள் தாய். அவரும் சம்மதித்தார். ஒரு மாதம் ஆகவில்லை அம்மா நான் மருத்துவராவேன் என்றார். அவருடைய தாய் You can be anything you want to be என்றார்.

அன்று முதல் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். மளமளவென முன்னேறி மருத்துவராகிவிட்டார். ஆஸ்திரேலியா சென்று உலகப் புகழ்பெற்ற நரம்பியல் வல்லுனராகிவிட்டார். தாம் படித்த பள்ளியில் வரவேற்பு கொடுத்தனர். அப்பொழுது அவர் தம் கைகளை நீட்டி உயிரை எடுத்த கைகள் இப்போழுது உயிரைக் கொடுக்கும் கைகளாயின; தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டவர் இவ்வளவு உயர்ந்து நிற்பதற்குக் காரணம் என் அன்பு அம்மா சொன்ன வாக்கு; 'நீ விரும்பினால் என்னவாகவும் ஆகலாம்'

# நம்புவோம்

என் இளைய நண்பரே,
உறுதியாக நிலைத்திருப்போம்...
விளையாடிப்பொழுதைப் போக்குவதற்கும்,
பகல் கனவு காண்பதற்கும்,
அழிவுக்கலாச்சார வெள்ளப் பெருக்கில்
அடித்துச் செல்வதற்கும் நாம் இங்கில்லை....
இங்கே மிகவும் ஆர்வமாய்ப் பணியாற்றவும்,
திட்டமிட்டு, இணைந்து செயல்படவும் இருக்கிறோம்.
இங்கு சுமைகளைத் தூக்கிச் செல்லும்
சுமைதாங்கிகளாக மாறிடவும் இருக்கிறோம்.

என் இளைய நண்பரே,
உன் வாழ்க்கைப் போராட்டத்தை நிறுத்திவிடாதே
பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயங்கிவிடாதே.
அனைத்தையும் வென்றிட ஆண்டவர் ஆற்றல் தருவார்.
அனைத்தையும் நமக்கு கொடையாகவே தருகின்றார்.

என் இளைய நண்பரே,
நாள்கள் எல்லாம் மோசமானவை
என்ற எதிர்மறை சிந்தனையை வளர்க்காதே
அதற்குக் காரணம் யார்? எது? என்ற
திறந்த மனதுடன் பதில் தேடு.
கைகள் கட்டி, வாய்கள் பொத்தி நின்றுவிடாதே,
எழுந்து உறுதியோடு எதிர்த்துநில்,
கடவுளின் பெயரில் பேசு.

என் இளைய நண்பரே,
உறுதியோடு நிலைத்திருப்போம்!
தீமை எவ்வளவு வேர் பதித்திருக்கிறது என்பது நம்
கவலையல்ல அதற்கு எதிராக எப்படி தொடர்ந்து
போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதே சிறந்தது.
நாள் முழுவதும் நம் போராட்டம் தொடரலாம்...
தளர்ந்து விடாதே!
நாளைய நம்பிக்கை என்னும் பாடல்
உலக வீதிகள் எங்கும் ஒலிக்கும்
நாளைய வாழ்வின் பாடல் அனைவருக்காகவும் வீதியில்
உலா வரும். நாளைய வரலாற்றின் வீரப்பாடல்
அனைவரின் இதயங்களையும் சுகமாக்கும்
நாளைய நம்பிக்கை சமூகத்தின்
அழுக்குகளைத் தூய்மை செய்யும்.

என் இளைய நண்பரே,
உறுதியோடு நிலைத்திருப்போம்! உவகையோடு
பயணிப்போம்.

# இளைஞர்களே!

## தவக்காலத்தில் தருமம் செய்வதில் எப்படிப்பட்ட அணுகுமுறை மனோபாவம் தேவை. இதோ சில....

1. தான் வைத்திருக்கும் உடமையிலிருந்து தருமம் செய்யவேண்டும்.
2. தருமம் செய்யும்போது முகம் கோணாமல் மகிழ்ச்சியுடன் தரவேண்டும்.
3. ஏழைகள் யாராயிருந்தாலும் அவரிடமிருந்து முகத்தைத் திருப்பக்கூடாது.
4. தான் வைத்திருக்கும் செல்வத்திற்கு ஏற்ப தருமம் செய்யவேண்டும்.
5. தருமம் செய்வதன் வழியாக துன்பம், நாளில் பெரும் செல்வம் வந்து சேர்ந்திருக்கும்.
6. இத்தருமம் ஒருவனைச் சாவிலிருந்து விடுவித்து என்றும் நிலைத்து வாழும் புகழ் தரும்.
7. தருமம் என்பது உன்னதக் கடவுள் முன்னிலையில் கொண்டு வரப்படும் சிறந்த காணிக்கையாகும்.
8. உணவையும், உடையையும் பகிர வேண்டும்.
9. தேவைக்கு மிகுதியான எல்லாவற்றையும் பிறருடன் பகிர வேண்டும்.




# அனைத்தையும் அர்ப்பணித்தார்

இயேசுவின் வாழ்வையும் அவரது பாடுகள் மற்றும் இறப்பையும் நாம் சிந்திக்கும்போது, நாம் கண்டுகொள்ளும் ஓர் உண்மை, இயேசு தம்மை முற்றிலும், தம் வாழ்வு முழுவதையும் தந்தை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தார். அதன் நிறைவே அவரது பாடுகளும், இறப்பும், இவ்வாறு, நம் ஒவ்வொருவருக்கும் அவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

மனிதர் என்பவர் யார்? நம்மை ஐந்து உட்கூறுகளாகப் பிரிக்கலாம்.

1. உடல் 2. மனம்
3. ஆன்மா 4. உணர்வுகள்.
5. உயிராற்றல்

இவை ஐந்தும் இணைந்ததுதான் முழுமையான மனிதர். எனவே, ஒருவர் தம்மை முழுமையாக இறைவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றால், இந்த ஐந்து வகைகளிலும் கையளிப்புச் செய்ய வேண்டும். இயேசுவின் வாழ்விலிருந்து இதைக் கற்றுக்கொள்கின்றோம்.

### 1. உடல்

நம்மை அடையாளப்படுத்தும் மிகப்பெரும் அடையாளம் நமது உடல்தான். ஆனால், நம் உடல் நமக்குச் சொந்தமல்ல. அது "ஆண்டவருக்கே உரியது. ஆண்டவரும் உடலுக்கே உரியவர்" (1கொரி 6:13). எனவேதான், "கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால், ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன் என்கிறார்" (எபி 10:7) என்று எபிரேயர் திருமடல் சொல்கிறது. மேலும் "இந்தத் திருவுளத்தால் தான் இயேசுகிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கின்றோம்" (எபி 10:10) இது இயேசுவின் அர்ப்பணத்தின் முதல்படி.

### 2. மனம்

மனிதரின் இரண்டாவது பரிமாணம் மனம், சிந்திக்கும் ஆற்றல். மாந்தரின் மனம் இறைவனையே எப்போதும் நினைக்க வேண்டும். "நான் படுத்திருக்கையில் உம்மை நினைப்பேன். இரா விழிப்புகளில் உம்மைப் பற்றியே ஆழ்ந்து சிந்திப்பேன்" (தி.பா 63:6) என்றார் திருப்பாடலாசிரியர். இயேசு எப்போதும் தந்தை இறைவனை மாட்சிப்படுத்துவது பற்றியே சிந்தித்தார். "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையை செய்துமுடிப்பதுமே என் உணவு" (யோவா 4:34) என்றார். அவரது மனம் இறைவனையே எப்போதும் நாடியது. அவரது இறப்பின் வேளையிலும் தந்தை இறைவனையே அவரது உள்ளம் நாடியது.

### 3. ஆன்மா

மனிதரை இறைவனுடன் ஒப்பிடச் செய்வது உடலோ, மனமோ அல்ல. மாறாக ஆன்மாதான். காரணம் மாந்தரின் ஆன்மா இறைச்சாயலில் படைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆன்மாவை இருள்சூழாமல் காக்க வேண்டியது நம் கடமை. இயேசு தம் வாழ்நாள் முழுவதும் பாவ மாசின்றி வாழ்ந்தார். எபிரேயர் திருமடல் அவரைப் பற்றி இவ்வாறு சொல்கிறது. "எல்லா வகையிலும் நம்மைப் போலச் சோதிக்கப்பட்டவர். எனினும் பாவம் செய்யாதவர்" (எபி 4:15)

### 4. உணர்வுகள்

மானிட ஆளுமையின் இன்னொரு சிறப்புத்தன்மை உணர்வுகள் மகிழ்ச்சி, துயரம், அச்சம், நம்பிக்கை, அவமானம், கவலை.... எனப் பலவிதமான உணர்வுகள் நம்மை ஆட்கொள்கின்றன. இயேசுவும், அனைத்து உணர்வுகளையும் அனுபவித்தார். தனது சாவு நெருங்கி வந்தபோது, அவர் துயரமும், மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார் (மத் 26:37). இருப்பினும், தமது உணர்வுகளையும் கடந்து, "என் தந்தையே, முடிந்தால் இத்துன்ப கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும், என் விருப்பப்படியே அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மத் 26: 39) என்று வேண்டினார். தமது உணர்வுகளையும் இறைவனிடம் கையளித்தார்.

### 5. உயிராற்றல்

மானிடரின் உடல், மனம், ஆன்மா, உணர்வுகள் அனைத்தையும் விட உயர்ந்தது நமது உயிராற்றல். வாழ வேண்டும், செயலாற்ற வேண்டும், சாதிக்க வேண்டும் என்னும் தாகம், பேரார்வம் ஒவ்வொருவருடைய ஆளுமையின் ஆழத்திலும் புதைந்துக்கிடக்கிறது. ஆங்கிலத்தில் அதனை "Will" என்றும் "Will Power" என்றும் சொல்கிறோம். உடலும், மனமும், ஆன்மாவும், உணர்வுகளும் ஒரு திசையில் நோக்கினாலும் அதற்கு மாறான திசை நோக்கும் ஆற்றல் நமக்கு உண்டு. அதுவே நமது உயிராற்றல், அல்லது உயிருக்கம். அது இறைவனை நோக்கினால் அதுவே சிறந்த செபம். இயேசு சிலுவையில் தொங்கி இறந்தபோது "தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று அவரது உயிராற்றலைத் தந்தையிடம் கையளித்தார். இவ்வாறு, தன் மானுட ஆளுமை முழுமையையும், தன்னை முற்றிலுமாக தந்தை இறைவனுக்கு அர்ப்பணித்தார். அதுவே சிறந்த செபம். அதுவே சிறந்த அர்ப்பணம். நாமும் இயேசுவைப் பின்பற்ற முயற்சி செய்வோம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# சிலுவைப்பாதை



சிலுவைப் பாதை - அது
மகிமைப்பாதை.
பாவிகளை மீட்க
பாரச்சிலுவை சுமந்தார்
இயேசு.

முள் முடி தரித்தார்.
மும்முறை விழுந்தார்
எழுந்தார்.
விண்ணகம்
மண்ணகத்தை
முத்தமிட்டது.

ஆணிகளால்
அறையப்பட்டார்.
காயங்களால்
வதைக்கப்பட்டார்.
அன்று
அவமானச்சின்னம்
சிலுவை
இன்றோ
அபிமானச்சின்னம்

இயேசுவால்.
உடலில் வந்தது இரத்தம்.
உள்ளத்தில் வந்தது
இரக்கம்.
தாகம் என்றார்
தம் பணி தொடர்ந்திட.
தலை சாய்த்து
ஆவி துறந்தார்
பாவிகள் எமக்காக.
அது சிலுவைப்பயணம்.


தொடர்ந்தது
மகிமைப்பயணம்.
உத்தமர் இயேசு
உயிரோடு எழுந்தார்.

உதித்தது
புது வாழ்வு.
மலர்ந்தது
மனித மாண்பு.
மாண்புள்ள மனுமகன்
விண்ணகம் ஏறினார்.

மீண்டும்
மகிமையுள்ள அரசராய்
மண்ணகம் வருவார்.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர், தெஹிவளை**

## எப்படி தாங்கினீர்?



இதயத்தின் உச்சியில்
எழுகின்ற தீச்சுவாலை
நெருப்புக்கு நடுவே
நிலைநின்ற திருச்சிலுவை
இதயமோ முள்முடியால்
இறுக்கப்பட்ட நிலைமை...

உம் சிரசிற்கு சூட்டிய
முள்முடி இடம்மாறி
இருதயம் வரை வந்ததோ
இன்னலைத் தொடர்ந்திட
எப்படித் தாங்கினீர் இயேசுவே
எப்படித் தாங்கினீர்
இத்தனை வலிகளையும்
நீர் எப்படித் தாங்கினீர்?

நித்தமும் நாங்கள்
செய்யும் பாவங்களால்
மெத்தமாய் துன்பத்தை
அனுபவிக்கும் இயேசுவே
எங்கள் சித்தத்தில் மாற்றம்
சீர்படும் என்றால்
இத்தனை துன்பம்
உமக்கேது இயேசுவே!





## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### தவக்காலத்தின் 5வது ஞாயிறு (07.04.2019)

### பேதுரு

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் ஐந்தாவது வாரத்தின் முதல் நாளிலே இறைவனுக்கு உகந்த பலியை தகுந்த பலியாய் ஒப்புக்கொடுக்க ஒன்றிணைந்து வந்திருக்கும் இறை உள்ளங்களே! மன்னிப்பும் மனமாற்றமும் இறைவனைச் சார்ந்தது மன்னிக்க வேண்டிய மனநிலையும் மனமாற்றத்திற்கான சூழ்நிலையும் மனிதனைச் சார்ந்தது. இயேசுவின் குணங்களிலே மேலோங்கி நிற்பது இரக்கம் நிறைந்த மன்னிப்பாகும். இயேசு பாவியை வெறுப்பவரல்ல அவர் பாவத்தை வெறுக்கின்றார். இன்றைய நடைமுறை வாழ்க்கையில் குற்றம் செய்தோர், தவறிழைத்தோர், பாவம் செய்தோர் மட்டில் நாம் எவ்வாறு செயல்படுகின்றோம். அயலவரின் அல்லது உறவுகளின் மனமாற்றத்திற்கு நாம் தடையாய் நிற்கின்றோமா? என்று சிந்திக்க நற்செய்தி துணை செய்கின்றது. மற்றவர்களின் அழிவைக் கண்டு மகிழும் எமது மனநிலைக்கு தகுந்த மருந்தான இன்றைய இறைவார்த்தை அமைந்துள்ளது. எனவே நாமும் பாவத்தை வெறுத்து பாவிகளை அணைத்து பரமன் இயேசுவைப் போல நடக்க இறையருள் வேண்டிடப் இப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : எசா 43:16-21**

இதோ நாம் புதியன செய்கின்றோம். நம் மக்களின் தாகம் தீர்ப்போம்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் மாபெரும் செயல் புரிந்துள்ளார். அதனால் பெருமகிழ்வடைகின்றோம்

**இரண்டாம் வாசகம் : பிலி 3:8-14**

கிறிஸ்துவின் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன் சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

இப்பொழுதாவது உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள். ஏனெனில் நான் அருள் நிறைந்தவர் இரக்கம் மிக்கவர் என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம் : யோவான் 8:1-11**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஒப்புரவு அருட்சாதனத்தின் வழியாக எம்மையெல்லாம் மனமாற்றத்திற்கும் அருள் வாழ்வுக்கும் அழைத்து செல்லும் திருஅவையையும், அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர் அனைவருக்கும் உமது அருளையும், ஆசீரையும், ஆன்மீகப் பலத்தையும் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் மன்னிப்புக்காக காத்திருந்த பாவிப்பெண்ணைப் போன்று நாமும் கடவுளின் இரக்கத்திற்காக காத்திருக்கவும் மற்றவர்களைத் தீர்ப்பிட்டு நாமும் தீர்ப்புக்கு உள்ளாகாமல் வாழவும், தவக்காலத்தின் இவ்விறுதி நாட்களில் ஒப்புரவு அருட்சாதனத்தை தகுந்த விதமாகப் பெற்றுக்கொள்ளவும், கடவுளுக்கும் அயலாருக்கும் உகந்த வாழ்வு வாழவும் வரமருள வேண்டுமென்று...

நாம் கொண்டாட இருக்கும் உயிர்ப்பு விழா உண்மையில் எமக்குப் புதுவாழ்வு அளிக்கும் விழாவாக அமைய நாமும் திருந்தி, மற்றவர்களையும் திருத்தியவர்களாக வாழ வழிகாட்டவும், நிலவும் சமூகப் பாவங்களை ஒழிக்கப் பாடுபடவும், எங்கும் மனித நேயம் மலரவும் வரமருள வேண்டுமென்று...

### ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு (14.04.2019)

**வாசக விளக்கம்:** கிறிஸ்து பெருமான் தம் பாஸ்கா மறைபொருளை நிறைவேற்ற ஜெருசலேமுக்கு வருகை தந்ததை திருஅவை இன்று ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறாக நினைவுகூர நம்மை அழைக்கின்றது. புனித காலத்தின் நுழைவாயில் குருத்து ஞாயிறு. ஒரு கொள்கை வீரனின் இலட்சியப் பயணம் எருசலேம் நகரை நோக்கி நகர்கிறது. இந்தப் பயணத்தில் ஒடுக்குவோருக்கும், ஆணவக்காரர்களுக்கும் இடமில்லை. நலிவுற்று, ஒடுக்கப்பட்டு உரிமையிழந்து நிற்கின்றவர்களின் பிரதிநிதியாக இயேசு எருசலேம் நோக்கிப் புறப்படுகின்றார். எவன் ஒருவன் தன் துன்பத்தின் மேன்மையையும் அதன் விலையையும் உணர்ந்து கொள்ளுகின்றானோ அவன் இம்மண்ணக வாழ்வில் வெற்றி பெற்றவனாவான். துன்பத்தை வெறுப்பவர்களின் மத்தியிலே துன்பம் தான் எனக்கு இன்பம் அதுவும் அடுத்தவர்களுக்காக என்று சொல்லுகின்றபோது என் இன்பம் இரட்டிப்பாக மாறுகிறது என்ற மனநிலையில் தான் இறைமகன் இயேசு எருசலேம் நுழைந்தார். குருத்தோலைகள் உயர்வதுபோல் நம் இதயங்களும் உயரட்டும். தன்னலப் போர்வைகளை அகற்றி எறிவோம். புதிய விடியலைச் சுவைப்போம். இந்தப் புனித காலம் நம்மைப் புனிதர்களாக மாற்றும் காலமாக இருக்கட்டும்.

**முதல் வாசகம் : எசா 50:4-7**

நிந்தனை செய்வோருக்கு என் முகத்தை மறைக்கவில்லை இழிநிலையை நான் அடைவதில்லை என்று அறிவேன்

**பதிலுரைப் பாடல் :**

என் இறைவா என் இறைவா என் என்னைக் கைவிட்டீர்

**இரண்டாம் வாசகம் : பிலிப் 2:6-11**

கிறிஸ்து தம்மையே தாழ்த்திக்கொண்டார் எனவே கடவுளும் கிறிஸ்துவை உயர்த்தினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்

**நற்செய்தி வாசகம் : லூக் 22:14-23-56**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தவக்காலத்தின் ஊடாக எம்மை வழிநடத்தி பரிசுத்த வாரத்திற்கு எம்மை அழைக்கும் திருஅவையானது எவ்வகைத் துன்பங்களையும், சவால்களையும் எதிர்கொண்டு என்றும் உலகின் ஒளியாகத் திகழவும் துன்பத்தின் மறுபக்கமே இன்பம் என்பதை திருஅவையின் இறைமக்களுக்கு உணர்த்தவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது மீட்பின் பெருநிகழ்ச்சிகள் நிறைவேறிய புனித வாரத்தை தொடங்கும் நாம் ஆண்டவர் இயேசுவின் பாடுகளில் பங்கேற்று அவருடன் புது வாழ்விற்கு உயிர்த்தெழவும் நம்மை முழுமையாக தயாரிக்கும் கடவுளின் பேரன்பில் பங்குகொள்ளவும் இவற்றின் ஊடாக உண்மையான நிரந்தரமான மகிழ்ச்சியில் திழைக்கவும் வரமருள வேண்டுமென்று...

இயேசுவின் உயிர்ப்பை மற்றவர்களுக்கு பறைசாற்றவும் நம்முடைய அன்றாட வாழ்க்கையின் வழியாகவும், செயல்பாடுகள் மூலமாகவும் வார்த்தைகளின் வாயிலாகவும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ்ந்து விண்ணக வாழ்வை நோக்கி நடைபயில வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 05

# திருநூலைப் படித்தல்

- நடை அழகையன்று, உண்மையைத் திருநூலில் தேடவேண்டும்.
- திருநூலின் ஒவ்வொரு புனித ஏட்டையும், எழுதப்பட்ட அதே கருத்தோடு படிக்கவேண்டும்.
- சொற் சிறப்பைவிடத் திருநூல் பயனையே பெரிதும் தேடவேண்டும்.
- ஆழ்ந்த, உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட நூற்களை எவ்வளவு ஆவலுடன் படிக்கின்றோமோ அவ்வளவு ஆவலுடன் பக்தியூட்டும் எளிய புத்தகங்களையும் படிக்கவேண்டும்.
- எழுதியவர் அறிவிற் குறைந்தவராக அல்லது சிறந்தவராக இருக்கலாம். அவருடைய திறமை உன்னைப் பாதிக்ககூடாது. கலப்பல்லா உண்மை மீதுள்ள ஆசையே உன்னைக் கற்கத் தூண்டவேண்டும்.
- இதைச் சொன்னவர் யாரென்று கேட்காதே. ஆனால், என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கவனி.
- மனிதர்கள் மறைத்துவிடுகிறார்கள். ஆனால் ஆண்டவரின் உண்மை என்றும் நிலைத்து நிற்கிறது.
- மனிதரின் முகப் பொலிவைப் பாராமல் இறைவன் பல வழிகளில் நம்முடன் பேசுகிறார்.
- ஒருமுறை படித்துவிட்டுச் செல்லவேண்டிய பகுதிகளை ஆழந்து கற்கவும், ஆராய்ந்து பார்க்கவும் எழும் அளவு கடந்து ஆவல், திருநூலிலுள்ள ஏடுகளை வாசிக்கும்போது நமக்குப் பெரிதும் தடையாக இருக்கிறது.
- நீ முன்னேற விரும்பினால் பணிவோடும், தெளிந்த மனத்தோடும் அன்றாடம் இவற்றைப் படி. ஆனால், கல்வியின் பெருமையைப் பெற நீ ஒருபோதும் விரும்பாதே.
- நீ மிகுதியாக வினாக்களை எழுப்பு. புனிதர்களின் வார்த்தைகளை மௌனத்தில் கேள். முதியோரின் நீதிக் கதைகள் உனக்கு வெறுப்பைத் தரவேண்டா ஏனென்றால், காரணமின்றி அவை உரைக்கப்படவில்லை.

**தொடரும்**

# தவக்காலம்

## ஒரு பொற்காலம்!

உள்ளமதை ஒன்றிணைத்து உத்தமராய் வாழ்வதற்கு எல்லையற்ற பரம்பொருளாய் இறைவனை நாம் ஆராதிப்போம்.

❖❖❖❖❖

பாவமென்னும் சுமை சுமந்து பரிதவிக்கும் நிலையகல தூய்மை தரும் காலம் இந்த தவக்காலம்.

❖❖❖❖❖

மக்களினம் மீளுவதற்கு மானிடனாய் வந்த மகன் பட்டபெரும் பாடுகளை நாம் நினைக்கும் காலம் இது.

❖❖❖❖❖

நாம் செய்த பாவமெனும் மூட்டைகளைச் சுமந்து சென்று பட்ட மரச் சிலுவையில் அறைந்தவற்றை நாமறிவோம்.

❖❖❖❖❖

ஆகவே,

❖❖❖❖❖

மனநிறைவாய் வாழுவதற்கு வரம் கிடைக்கும் தவக்காலம். தவக்காலம் நமக்கெல்லாம் பொற்காலம். ஒரு சந்தி உபவாசம், ஒறுத்தல் முயற்சிகளால் புதுவாழ்வு பெற்றே நாம் புதுப்பிறப்பு அடைந்திடுவோம்.

# இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரையும் போதைப்பொருள் அரக்கனிடமிருந்து காப்பாற்றுவோம்.










முதலாம் பக்கத் தொடர்ச்சி.....

இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரையும் போதைப்பொருள் அரக்கனிடமிருந்து காப்பாற்றுவது எமது கடமையாகும். நாட்டின் பேரழிவை ஏற்படுத்தும் போதைப்பொருள் இறக்குமதியில் ஈடுபட்டிருப்போர். விற்பனையாளர், சிறிய விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் என எந்தவித வேறுபாடுமின்றி அவர்களுடனான உறவை துண்டித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறானவர்களுடன் எவ்வித தொடர்பு, பணம், உதவிகளைப் பெற்றுக்கொள்வதையும் தவிர்க்க வேண்டும். கடும் வெயில், தாகம், சிரமம் பாராது நாம் திரண்டிருப்பதற்கான காரணம் எமது பிள்ளைகளை, சமூகத்தை, நாட்டை இவ் அச்சுருத்தலிலிருந்து காப்பாற்றுவதற்கேயாகும்.

கொழும்பு மட்டக்குளி விஸ்ட்வைக் மைதானத்தில் நடைபெற்ற போதைப்பொருளுக்கு எதிரான பேரணியின் போது தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க, மற்றும் இந்து, முஸ்லிம் மதத்தலைவர்களினதும் ஒத்துழைப்புடன் நடைப்பெற்றது. அதிமேதகு கர்தினால் ஆண்டகை தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், இம்மைதானத்தில் கடும் வெயில் என்றும் பாராமல் பல மக்களும் அவர்களுடன் நாட்டு தலைவர்கள் மதத்தலைவர்கள் இணைந்து இப்பேரணியில் கலந்துக்கொண்டதற்கான பிரதான காரணம்; நாட்டில் நடக்கும் இந்த அச்சுறுத்தலை பொறுக்க முடியவில்லை. எமது நாட்டின் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் மாத்திரமல்ல, பெரியோரும் இவ்வச்சுறுத்தலில் சிக்கித் தவிக்கின்றார்கள்.

எமது தாய் தந்தையரிடமும், எமது இளைய சமுதாயத்திடமும் நான் வேண்டுவது என்னவென்றால், எமது திருமண வைபவங்களில், திருவிழாக்களில், விருந்துபசாரங்களில் மதுபோதை சம்பந்தப்பட்ட எப்பொருளையும் பாவிக்காமல், எமது சிறுவர்கள், இளையோருக்கு முன்மாதிரிகையாளர்களாக வாழ்ந்து காட்டுவதன் மூலம் தனிப்பட்ட முறையில் போதைப்பொருள் எதிர்ப்பைத் தெரிவித்து எமது பரம்பரையினரை, நாட்டைக் காப்பாற்றுமாறு உருக்கமாகவும் உறுதியாகவும் வேண்டுகிறேன்.

இன்று அச்சுருத்தலுக்கு நாம் முழுநாட்டு மக்களும் முகம்கொடுத்துக்கொண்டிருப்பதால், எம்மால் முடிந்த எல்லா இடங்களிலும் போதைப்பொருளுக்கு எதிராக பேரணி, ஆர்ப்பாட்டங்கள் நடத்தி இவ்வச்சுறுத்தலிலிருந்து மக்களை விழிப்புணர்வாக்குவோம். எமது நோக்கம் நாட்டிற்குள் ஊடுருவியிருக்கும் இவ் அச்சுறுத்தலைப்பற்றி நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி, இவ்வழியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற ஜனாதிபதி, பிரதம மந்திரி உட்பட நாடு முழுவதிலுமுள்ளவர்கள் இவ் அச்சுறுத்தலுக்கு எதிராக வெகுண்டெழுந்து முன்னேற வேண்டும். அடுத்து கடும் வெயிலிலும் திரண்டிருந்த மக்கள் முன் உரையாற்றிய மதிப்பிற்குரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், எமது நாட்டின் பேரழிவுக்குரிய அடித்தளமான சட்ட விரோதமான போதைப்பொருள், போதை மாத்திரை உட்பட அனைத்து போதை சம்பந்தப்பட்டவைகளை இறக்குமதி செய்யும் உமது நாட்டின் உயர் அதிகாரிகள், செல்வந்தர்கள், வர்த்தகர்கள், மறைமுகமாக இதற்கு உதவியளிக்கும் யாராக இருந்தாலும் அவர்களுடன் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல், அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டும். பதவிகளிலிருந்து நீக்க வேண்டும். அச்சுறுத்தலாக இருக்கும் போதைப்பொருளை அழித்தொழித்து எதிர்காலத்தில் எமது நாட்டை ஆளும் இன்றைய சிறுவர்களை பாதுகாக்க நாம் முன்னெடுக்கும் செல்பாடுகளை திடப்படுத்தி ஊக்குவிக்கும் கொழும்பு மறைமாவட்ட அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் மற்றைய மதத்தலைவர்களினதும் ஒத்துழைப்புடன் நடைபெறும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் இந்நாட்டு ஜனாதிபதி என்ற ரீதியில் நான் எனது மனப்பூர்வமான பாராட்டைத் தெரிவிக்கிறேன் என்றார்.

இங்கு தமது கருத்தைத் தெரிவித்த பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க அவர்கள், எமது நாட்டை போதைப்பொருளினால் ஏற்படும் அழிவிலிருந்து காப்பாற்ற ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பித்த இவ்வேளைத்திட்டம் முழுமையாக வெற்றிப்பெற பத்து வருடங்கள் செல்லும். அதற்காக நாட்டின் பாதுகாப்பும் மற்றைய நிலைகளையும் சக்திப்படுத்த மேலும்வேறு நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்க பின்நிற்கப்போவதில்லை என கூறினார்.

இங்கு கமுணு கமே வஜிர தலைமை தேரர், மௌலவி முஸ்லிம் தலைவர்கள், சீத்தாராம் சர்மா குருக்கள் ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். கொட்டாஞ்சேனை பரமாந்த விகாராதிபதி தஓவிட விமலவங்ச தலைமை தேரர், முஸ்லிக் சமய தலைவர்கள், இந்து குருக்கள் கத்தோலிக்க அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் என பலரும் கலந்துக்கொண்டனர்.






# தெமட்டகொட பங்கு

# வெள்ளவத்தை பங்கு







# வத்தளை பங்கு

# செக்கடித்தெரு பங்கு





திவான், தரம் 3, இராஜகிரிய.



B. டிவரா, தரம் 5, இராஜகிரிய.

# திருச்சிலுவை முன் மன்றாடுங்கள்



மிகவும் இனியவரான இயேசுவே! சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் உம் முன்னே, நான் முழந்தாளில் இருந்து மன்றாடுகின்றேன். 'இறைவாக்கினரான தாவீது அரசர் வழியாக, என் கைகளையும், கால்களையும், துளைத்தார்கள், என் எல்லா எலும்புகளையும் எண்ணினார்கள்' என்று திருப்பாடலில் முன்னரே நீர் அறிந்திருக்கிறீர். ஐந்து புனிதமான உம் காயங்களையும், நிறைந்த துக்கத்தோடும், வேதனையோடும் இப்பொழுது நான் ஆழ்ந்து தியானிக்கின்றேன்.

உம்மை நான் உறுதியாக நம்பவும், நீர் தரும் நிலைவாழ்வை, எதிர்நோக்கவும், உம் தியாக அன்புறவில் நிலைகொள்ளவும் ஆவலை என் இதயத்தில் எழுப்பிவிடும். என் பாவங்களின் மேல் வெறுப்பையும், அவற்றில் இருந்து வெளியேறத் துணிவையும் இப்போதே என் இதயத்தில் தோன்றச் செய்யும். நீர் உயிர்த் தியாகம் செய்துள்ளீர். நான் மிகுந்த ஆவலோடு, இரந்து கேட்பதை தவறாது தாரும் ஆமென்.

அருள் உதவிகளை அதிகம் அள்ளித்தரும் செபமாக இச்செபம் திருச்சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. நீர் தனிமையில் ஆலயத்தில் இருந்து திருச்சிலுவையைப் பார்த்துக்கொண்டே இச்செபத்தை மன்றாடலாம் அல்லது உமது வீட்டில் இருந்தும் திருச்சிலுவைமுன் மன்றாடலாம். நீர் மன்றாடும்போது, இயேசுவின் திரு உடலும் இரத்தமும் உமக்கு என்ன செய்துள்ளன என்பதை நினைத்து மன்றாடும்.




# விவிலியப் பகுதி



## மத்தேயு நற்செய்தி

### அதிகாரம் 1 முதல் 14 வரை

76. தொழுநோயாளியை எவ்வார்த்தைகளால் இயேசு குணப்படுத்துகிறார்?
77. தொழுநோயாளி நலமடைந்ததற்கு எது சான்றெனஇயேசு கூறுகிறார்?
78. இயேசு கப்பர் நாகூமிற்கு சென்றபோது அவரிடம் உதவி வேண்டி வந்தவர் யார்?
79. நூற்றுவர் தலைவனின்மகன் எந்நோயால் வேதனையுற்றான்?
80. ஐயா நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன்" என இயேசுவிடம் கூறியது யார்?
81. இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையைக் கண்டதில்லை என இயேசு பாராட்டியவர் யார்?
82. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன்வந்து பந்தி அமர்பவர் யார்?
83. பேதுருவின் மாமியாரை இயேசு எந்நோயிலிருந்து விடுவித்தார்?
84. நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன் என்று கூறியவர் யார்?
85. 'மானிட மகனுக்கு தலைசாய்க்க இடமில்லை' என இயேசு யாரிடம் கூறுகிறார்?
86. 'காற்றும், கடலும் இவருக்கு கீழ்ப்படிகின்றனவே இவர் எத்தகையவரோ என வியந்தவர் யார்?
87. பேய்பிடித்த இருவர் கல்லறைகளிலிருந்து வெளியேறி இயேசுவுக்கு எதிரே எப்பகுதியில் வந்து கொண்டிருந்தனர்?
88. 'மகனே துணிவோடிரு உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என இயேசு யாரைப்பார்த்து கூறுகிறார்?
89. இவன் கடவுளை பழிக்கிறான் என்று தமக்குள் சொல்லிக் கொண்டவர்கள் யார்?
90. சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்தவர் யார்?

விடைகள் 15ம் பக்கம்

தொடரும்

# தகுதிக்கு ஏற்ற சிலுவை




மழை பெய்யும் அடையாளமாக வானம் இருண்டது. காய்ந்து கொண்டிருந்த விறகுகளை சிறியதாகவும் பெரியதாகவும் கட்டுகளாகக் கட்டி பிள்ளைகளிடம் கொடுத்தார் தந்தை. அவர்கள் அவற்றை ஈரம் பாதிக்காதபடி உலர்ந்த இடத்தில் வைத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அண்ணன் தம்பியை அழைத்து, **நீ சிறியவன். ஆனால் உனக்கும் எங்களுக்கு கொடுப்பது போன்று பெரிய கட்டையை அல்லவா அப்பா கொடுக்கிறார் பெரிய கட்டை – சுமக்க மறுத்துவிட்டு சிறிய கட்டையைக் கொடுக்கும்படி கேள்** என்றான்.

**என்னால் எவ்வளவு சுமக்க முடியும், எனக்கு எவ்வளவு சுமை கொடுக்க வேண்டும் என்பது அப்பாவுக்கு நன்கு தொயும்** என்று சாந்தமாகப் பதில் அளித்து தொடர்ந்து விறகுக் கட்டுகளைச் சுமந்தான். அண்ணன் வாயடைத்துப் போய் நின்றான்.

**ஆம், என் நுகம் இனிது!**
**என் சுமை எளிது**
(புனித மத்தேயு 11:30)

# வர்ணம் தீட்டுக.



# tptpypak; mwpnthk;

- திருவிவிலியத்துக்கு வேதாகமம், திருநூல், மறை நூல், இறைவார்த்தை என்று பல பெயர்கள் உண்டு.
- திருவிவிலியத்தில் பழைய, புதிய ஏற்பாடுகள் என்று இரு பகுதிகள் உள்ளன.
- திருவிவிலியத்தில் பழைய, ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் இருக்கின்றன.
- பழைய ஏற்பாட்டில் திருச்சட்ட நூல்கள், வரலாறு நூல்கள், இறைவாக்கினர் நூல்கள், ஞான நூல்கள் என்று நான்கு பிரிவுகள் உண்டு.
- புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்கள், வரலாற்று நூல்கள், திருமுகங்கள் (கடிதங்கள்), திருவெளிப்பாட்டு நூல் என்று நான்கு பிரிவுகள் உண்டு.
- மீட்பின் வரலாறு ஆபிரகாமோடு ஆரம்பமாகி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு முடிவடைகிறது.
- ஆதாம் தொடக்கம் ஆபிரகாம் வரையிலாக வரலாறு, வரலாற்றுக்கு முன் உள்ள வரலாறு என்று அழைக்கப்படுகிறது.
- ஆபிரகாம் ஏறத்தாள கி. மு. 20ம் நூற்றாண்டிலும், மோசே கி. மு 13ம் நூற்றாண்டிலும், தாவீது கி.மு 10ம் நூற்றாண்டிலும் வாழ்ந்தார்கள்.
- பழைய ஏற்பாடு எழுத்து வடிவம்பெற 1400 ஆண்டுகள் எடுத்தது.

மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்



நான் எல்லோருக்கும் என் அன்பைக் காட்டுகின்றேன். சூரியன் தன் ஒளியையும் வெப்பத்தையும் எல்லோருக்கும் கொடுப்பதுபோல

மேகம் தன் மழையை எல்லோருக்கும் பொழிவதுபோல

மலர் தன் மணத்தை எல்லோருக்கும் வழங்குவதுபோல நான் என் அன்பை எல்லோருக்கும் கொடுக்கின்றேன்.

நல்லவர் - கெட்டவர் நீதிமான் - நீதியற்றவர் பாவிகள் - புனிதர்கள் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் அன்பு செய்கின்றவன் நான்.

இதுதான் எனது இயல்பு, இதுதான் எனது தனித்தன்மை, இதுதான் எனது இதயத் துடிப்பு, இதுதான் எனது உயிர்மூச்சு இதுதான் உனது கதை.

எதற்காக என் மகன் இயேசுவை உன் மத்தியில் அனுப்பினேன் தெரியுமா? நான் எவ்வாறு மக்களை அன்பு செய்கிறேன் நான் உன்னை எவ்வாறு அன்பு செய்கின்றேன் என்பதை உனக்கு எடுத்துக் காட்டத்தான்.

குறிப்பாக பாவிகள் எனக் கருதப்படுபவர்களை சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களை சமுதாயத்தில் ஓரம் தள்ளப்பட்டவர்களை, ஏழைகளை, விதவைகளை எவ்வாறு அன்பு செய்கின்றேன் என்பதை மக்களுக்கு எடுத்துரைக்கத்தான்.

நான் கடைநிலையில் உள்ள ஆடுகளை தொலைந்து போன ஆடுகளை நலிந்த ஆடுகளை தேடித்தான் வந்தேன்.

தொண்ணூற்றொன்பது நல்ல ஆடுகளை விட்டுவிட்டு காணாமல் போல ஓர் ஆட்டினைத் தேடி வந்தேன்.

ஏனெனில் காணாமல் போன ஆடுகளும் என்னால் அன்பு செய்யப்பட வேண்டிய இந்த ஆட்டிற்குத்தான் எனது அன்பு அதிகம் தேவை. அத்தகைய ஆட்டினைத் தேடி அலைந்தேன்.

ஊதாரிப்பிள்ளை உவமையில் என் வீட்டை விட்டுச் சென்ற அந்த மகனுக்காக என் உறவிலிருந்து பிரிந்து சென்ற அந்த மகனுக்காக தினமும் என் வீட்டு வாயிலில் காத்திருந்தேன்.

இன்று நான் உன் வருகைக்காகக் காத்திருக்கின்றேன்.

நீ இன்று என்னைத் தேடி வந்திருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

## எல்லோரையும் அன்பு செய்கின்றேன்.

# விவிலியம் பற்றி

## விவிலியம் வாசிக்க...

விவிலியத்தை வாசிக்க பல வழிகள் உண்டு அதில் PRIMA PROCESS என்ன என்பதைப் பற்றி அறிவோம்

***PRAYER***

விவிலியம் வாசிக்கும் முன் தூய ஆவியின் துணை வேண்டி செபித்தல்.

***READ A Hentively***

விவிலியம் பகுதியை கவனமாக வாசித்தல்

***I Magine the Context***

விவிலியப் பகுதி எழுதப்பட்டக் காலம் சூழலுக்குள் நுழைய முற்பகுதி, இதில் ஆசிரியர் என்ன சொல்ல விரும்புகிறார் என அறிந்துக் கொள்ளுதல்

***Meditation***

வாசித்ததை உன்னுடைய சூழலுடன் தொடர்பு-படுத்தி தியானம் செய். இதில் ஒரு கருத்தை அல்லது ஓர் இறைவாக்கைப் பயன்படுத்து

***Apply the test***

வாசித்து, பொருள் அறிந்து மற்றும் தியானித்த விவிலியப் பகுதிகளை உம் அன்றாட வாழ்வுக்குப் பயன்படுத்து

**உனக்கு மேலே உள்ளவனைப் பார்த்து ஏங்காதே**
**தாழ்வு மனப்பான்மை வரும்.**
**உனக்கு கீழே உள்ளவனை ஏளனமாகப் பார்க்காதே**
**தலைக்கணம் வரும்.**
**உன்னை யாரோடும் ஒப்பிடாமல் நீ நீயாக இரு**
**தன்னம்பிக்கை வரும்.**

## படித்ததில் பிடித்தது

தவறை இறைவன் மன்னிப்பார், ஆனால்
அதை நீ மறைப்பதை விரும்பமாட்டார்!

\- - - - - - - - -

இறைவனால் உனக்குள் ஒரு மாற்றம்
ஏற்படும்வரை,
நீ காணும் மாற்றங்கள் எல்லாம் மாயையே!

\- - - - - - - - -

இயேசுவின் காயங்களை நோக்கு,
ஆறாத உன் காயங்கள் ஆறும்!

\- - - - - - - - -

கடவுளை நோக்கி நீ ஓடினால்,
கவலைகள் உன்னை விட்டு ஓடிவிடும்!

\- - - - - - - - -

இறைவன் வெறுப்பதை உன்னை விட்டு விலக்கு,
நீ விரும்புவதை இறைவனிடமிருந்து பெறுவாய்!

\- - - - - - - - -

தவறை ஏற்றுக்கொள்பவனின் மனம்
பக்குவமடைகிறது. தவறை மறைக்கிறவனின்
மனம் பழுதடைகிறது!

# மாறாத வரை

**வாச மலர் அழகு தான்**
**வாடி விடாத வரை**

**கொட்டும் மழை அழகு தான்**
**வெள்ளமாக மாறாத வரை**

**தென்றல் அழகு தான்**
**புயலாக மாறாத வரை**

**பனித்துளி அழகு தான்**
**சூரியனை காணாத வரை**

**நட்பு அழகு தான்**
**நம்பிக்கை இருக்கும் வரை**

**எல்லாமே அழகு தான்**
**எல்லை மீறாத வரை**

**சத்தியமாய் செத்துவிடு சாதிக்க இதுநேரம்....!**
**நித்தியமாய் வாழ்வதற்கு நெஞ்சதனை நிமிர்த்துவிடு!**
**புத்தியினால் வரும்பிழைகள் போக்கிவிடு இப்பொழுது!**
**பத்தியத்தால் உன் பாவப் பலவீனம் மடியட்டும்!**


**மயக்குகின்ற மதுவகையை மனத்துள்ளே கொன்றுவிடு!**
**இயக்குகின்ற இச்சைகளை இடம்பெறாது**
**துரத்திடுவிடு!**
**தயக்கமின்றி தன்பாவத்தவறுகளைக் களைந்துவிடு!**
**வியக்கவைக்கும் ஆசைகளை வீணென்று விட்டுவிடு!**

**உயருகின்ற எம்மரமும் உயர்வானைத் தொட்டதில்லை!**
**கயிறுகளால் அளந்தாலும் கடல் ஆழம் கண்டதில்லை!**
**பயமின்றி பிழைசெய்தும் பசியடங்கப் போவதில்லை!**
**தயவிருந்தால் இறையெழுந்து**
**தமதுணவைத் தருவாரே!**

**மண்விளைத்து உண்ணுகிறோம்**
**மண்ணுக்குள்ளே போகும்வரை!**
**மண்ணன்றி நமதுடலில் மற்றென்ன இருக்கிறது?**
**விண்ணொற்றி நமதான்மா வீடடைய வேண்டுமெனில்**
**கண்ணொற்றி இறைவார்த்தை கையேந்தல்**
**நலமன்றோ?**

**எப்படையும் இப்புவியில் இறைபடைப்பே ஆனாலும்**
**ஒப்பனையாய் ஒரு படைப்பு**
**உருவாக்கும் மானுடந்தான்!**
**தப்பெனவே தன்பாவ நடந்தனிலே சென்றதினால்**
**எப்படியும் மீட்டெடுக்க இறை இறந்த காலமிதே!**

**தூயவழி செல்லாது துரத்திவரும் சாத்தானை**
**மாயவிடல் மனத்துள்ளே மகத்தான சாதனைதான்**
**ஆயனாம் இறையுடனே அன்றாடம் நாம் நடந்தால்**
**நேயமுடன் வான்வீட்டில் நிச்சயமாய் தங்கிடலாம்!**



# பாவத்துக்குச் செத்து விடு






கவர்ச்சியூட்டும் வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து வாழ்வதற்கு, தவக்காலம் அருளை வழங்குகின்றது என்று, தவக்காலத்தின் முக்கியத்துவம் பற்றி, இச்சனிக்கிழமையன்று, தன் டுவிட்டரில் பதிவுசெய்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வெளிப்புறத் தோற்றங்கள், பணம், செய்யும் தொழில் மற்றும், பொழுதுபோக்குகள், நம்மை மயக்க வைக்கின்ற எச்சரிக்கைகள் இவை நம் இலக்கை அடையவிடாமல், திசை திருப்புகின்றன, வீண்பெருமைகளிலிருந்து நம் இதயங்களை விடுவிப்பதற்குத் தேவையான அருளை, தவக்காலம் வழங்குகிறது.




“கிறிஸ்து உயிரோடு இருக்கிறார். அவரே நம் நம்பிக்கை. வியத்தகு வழியில் இவ்வுலகிற்கு அவர் இளமையைக் கொணர்கிறார்”

“இறைவனின் வார்த்தை, திருப்பலி, கிறிஸ்து மற்றும் தூய ஆவியாரின் பிரசன்னம் ஆகியவற்றின் வழியே தன் சக்தியைப் புதுப்பித்துக்கொள்ளும் போது திருஅவை இளமையாக உள்ளது”

“வயதில் நீங்கள் இளையோராய் இருந்து, அதே வேளையில் சக்தியற்று, குழம்பிப் போயிருந்தால், உங்களை புதுப்பிக்கும்படி இயேசுவிடம் கேளுங்கள். அவரிடம், நம்பிக்கை ஒருபோதும் தவறுவதில்லை”

“இந்த தவக்காலம் வழங்கும் தகுந்த வேளையை நாம் வீணாக்காமல் இருப்போம். உண்மையான மனந்திரும்பல் நோக்கிய நம் பயணத்தில் உதவும்படி இறைவனை வேண்டுவோம்”

“குறிப்பாக, வலுவிழந்தோர்மீது நாம் காட்டும் பிறரன்பு என்பது, பிறரை சந்திக்கும் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதில் நல்லதொரு வாய்ப்பு”

“இறைத்தந்தையின் இதயத்தை குறித்து தியானிக்க இயேசு அழைக்கிறார், அத்தகைய கண்ணோட்டத்தின் வழியாகத்தான், நாமனைவரும் சகோதரர், சகோதரிகள் என்பதை மீண்டுமொருமுறை ஏற்றுக்கொள்ள முடியும்”

“எனக்கு இனிய வரவேற்பளித்த மொராக்கா மக்களுக்கு என் நன்றியை வெளியிடுகிறேன். அருளும் இரக்கமும் நிறைந்த இறைவன் உங்களை பாதுகாத்து, மொராக்கா நாட்டை அசீர்வதிப்பாராக”

“ஒருவரையொருவர் சந்திப்பதற்கும், நட்பின் கரங்களை நீட்டுவதற்கும் கொண்டுள்ள மனவுறுதியே, மனித குலத்தின் அமைதிக்கும் இணக்க வாழ்வுக்கும் உரிய பாதை”

“நம் பொது இல்லமாகிய இவ்வுலகில் தங்களுக்குரிய சரியான இடத்தைக் கொண்டிருக்கவும், கனவு காணவும், வாழ்வதற்கும் உரிய உரிமையை ஒவ்வொருவரும் கொண்டுள்ளார்கள்”

# கடந்த 22 ஆண்டுகளில், கடந்த 4 ஆண்டுகள் அதிக வெப்பம்



சூரிய ஒளி குறைவாகக் கிடைத்தால், மனிதரின் மனநிலை மற்றும் உடல்நலம் பாதிக்கப்படுவதுடன், வைட்டமின் D பற்றாக்குறையையும் அதிகரிக்கின்றது, அதேநேரம், அதிகஅளவிலான சூரிய ஒளியும், தோல், கண்கள், மற்றும் நோய் எதிர்ப்புசக்தி அமைப்பில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்று, உலக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.


பங்குனி 23, சனிக்கிழமையன்று உலக வானிலை நாள் கடைப்பிடிக்கப்பட்டதை முன்னிட்டு, இப்பூமியில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்கள் மற்றும் காலநிலையில் சூரிய ஒளி ஏற்படுத்தும் தாக்கம் பற்றி செய்தி வெளியிட்டுள்ள, ஐ.நா.வின் உலக வானிலை ஆய்வு மையம் (WMO), பெருங்கடல்களில் இடம்பெறும் சுழற்சிகள் மற்றும் வானிலையில் உருவாகும் மாற்றங்கள் பற்றியும் தகவல்களை வழங்கியுள்ளது.

கடந்த 22 ஆண்டுகளில், இருபது அதிக வெப்பமான ஆண்டுகள் பதிவாகியுள்ளன என்றும், இவற்றில் அதிக வெப்பமான நான்கு ஆண்டுகள், கடந்த நான்கு ஆண்டுகள் என்றும் இந்த மையம் வெளியிட்டுள்ளதையடுத்து, காலநிலை மாற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளார், ஐ.நா. பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரெஸ். வருகிற புரட்டாதி 23ம் திகதி, நியுயார்க்கில், காலநிலை மாற்றம் குறித்த, உலக உச்சி மாநாடு ஒன்றையும், கூட்டேரெஸ் அவர்கள் நடத்தவுள்ளார்.

சூரியன், ஏறக்குறைய 15 கோடி மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது, 450 கோடி ஆண்டுகளாக, காலநிலை மற்றும் பூமியின் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கிய காரணியாக உள்ளது, ஏறக்குறைய 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுற்ற பனி யுகத்திலிருந்து புவியின் காலநிலை, ஏறக்குறைய நிலையாக இருந்து வந்துள்ளது என்ற தகவலையும் அந்த மையம் வெளியிட்டுள்ளது.

# “கிறிஸ்து உயிரோடு இருக்கிறார்”

## திருத்தந்தையின் அறிவுரை மடல்




இளையோரை மையப்படுத்தி, கடந்த ஆண்டு ஐப்பசி மாதம் வத்திக்கானில் நடைபெற்ற உலக ஆயர்கள் மாமன்றத்தில் பகிர்ந்துகொள்ளப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது அறிவுரை மடலாக, சித்திரை 2, செவ்வாயன்று திருப்பீடத்தில் வெளியிடப்பட்டது.

### இளவயது புனிதர்களும், இயேசுவின் இளவயதும்

திருஅவையில் தங்கள் முக்கிய இடத்தை உணர்ந்து, இளையோர் செயலாற்றவேண்டும் என்பதை, தன் மடலில் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையில் கொண்டாடப்படும் இளவயது புனிதர்கள், விவிலியத்தில் இடம்பெறும் இளையோரின் எடுத்துக்காட்டுகள், இயேசுவின் இளவயது நிகழ்வுகள் ஆகியவற்றை தன் மடலில் குறிப்பிட்டுள்ளார். திருஅவை, இளமையோடு செயல்படவேண்டியதன் அவசியம், இளையோரின் குரலுக்கு செவிமடுக்கவேண்டிய அவசியம், இளையோரை மையப்படுத்திய பணிகளை புதுப்பித்தல், இளையோரை ஈர்த்தல் போன்ற கருத்துக்களையும், திருத்தந்தை இம்மடலில் பதிவு செய்துள்ளார்... 15

# எருசலேம் தலத்திருவையுடன் ஒருங்கிணைப்பு வழங்க...

எருசலேம் தலத்திருவையுடன் நம் ஒருங்கிணைப்பையும், உறுதுணையையும் வெளிப்படுத்தும் வண்ணம், 2019ம் ஆண்டில் புனித பூமியின் வளர்ச்சித் திட்டங்களுக்கு, தவக்காலத்தில் நிதி உதவி வழங்க, அனைத்துலக கத்தோலிக்கருக்கு விண்ணப்பம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

புனித பூமியின் வளர்ச்சிக்கென, ஒவ்வோர் ஆண்டும், தவக்காலத்தின் புனித வாரத்தில், குறிப்பாக, புனித வெள்ளியன்று திரட்டப்படும் நிதியைக் குறித்து இவ்வாண்டு, கீழைவழிபாட்டு பேராயத்தின் தலைவர், கர்தினால் லியோனார்தோ சாந்த்ரி அவர்களும், இப்பேராயத்தின் செயலர், பேராயர் சிரில் வாசில் அவர்களும் தங்கள் விண்ணப்பத்தை, வெளியிட்டுள்ளனர்.

இயேசு எருசலேம் நகருக்குள் நுழைந்தபோது மக்கள் மேற்கொண்ட குருத்தோலை பவனியுடன் துவங்கும் புனித வாரம், பெத்தானியாவில் அவரது திருவடிகள் நறுமணத் தைலத்தால் அர்ச்சிக்கப்பட்டது, மேலறையில் நிகழ்ந்த இரவுணவு, கெத்சமனி தோட்டம், கல்வாரி, மற்றும் அடக்கம் செய்யப்பட கல்லறை என்ற



அனைத்து தலங்களையும் கொண்ட புனித பூமியை, நம் வழிபாட்டு நினைவுக்குக் கொணர்கிறது என்று, கர்தினால் சாந்த்ரி அவர்கள், தன் விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிறிஸ்துவைப்போல், நாமும், சுயநல விருப்பங்களிலிருந்து வெளியேறி, அடுத்தவரைச் சந்திக்கவும், சமுதாயத்தின் விளிம்பில் வாழ்வோருக்கு உதவிகள் செய்யவும் விடுக்கப்படும் ஓர் அழைப்பே புனித வார நிகழ்வுகள் என்று, கர்தினால் சாந்த்ரியின் விண்ணப்பச் செய்தி கூறுகிறது. திருத்தூதர் பேதுரு பயணித்த புனித பூமியில், அவருக்கு அடுத்ததாக, 1964ம் ஆண்டு, முதல் முறையாக அவரது வழித் தோன்றலான புனித 6ம் பவுல் புனித பூமிக்கு திருத்தூதுப் பயணம் மேற்கொண்டதையும், அந்த பயணத்தின் விளைவாக, 1974ம் ஆண்டு, Nobis in Animo என்ற திருத்தூது அறிவுரை மடல் வழியே, புனித பூமியின் வளர்ச்சி நிதிக்கு அழைப்பு விடுத்ததையும், கர்தினால் சாந்த்ரி அவர்கள், தன் விண்ணப்ப மடலில் குறிப்பிட்டுள்ளார்.

எருசலேம் நகரம் மும்மதங்களுக்குப்
பொதுவான நகரம்
விபரம் 15ம் பக்கத்தில்...



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 6:9)

பகுதி – 16

## பணியால் வேண்டுவோம்

இறைவேண்டல் என்பது சொற்களால் ஆனது, வாய்மொழியால் எழுப்பப்படுவது என்பது மிகவும் குறுகிய பார்வை. செபம் என்பது மனநிலை, சொற்கள், அவற்றோடு சேர்ந்த செயல்கள், நிறைவான வாழ்வு அனைத்தும் இணைந்ததே என்பதுதான் இறைவேண்டல் பற்றிய முழுமையான பார்வை.

செயலற்ற நம்பிக்கை பயனற்றது. (யாக் 2:20) என்றார் புனித யாக்கோபு. அதுபோல, செயலற்ற செபமும், பயனற்றதே என நாம் கொள்ளலாம். நமது பணிகளை, நமக்குத் தரப்பட்ட வேலைகளை நேர்த்தியாக, நேர்மையாக ஆற்றுவது அருமையான செபம் என்னும் உயர்நிலைக்கு நமது ஆன்மீகத்தை எடுத்துச் செல்வோம். நமது பணியை நன்கு ஆற்றுவதே நல்ல வேண்டல் என்னும் பார்வையை விவிலியம் நமக்குத் தருகிறது. பணி பற்றிய இறைமொழியின் செய்திகளை பின்வருமாறு பார்க்கலாம்.

### 1. நமது வேலை ஓர் அழைத்தல்

முதன்முதலில், வேலை, பணிகளைப் பற்றிய நமது மனநிலையை, பார்வையை நாம் ஆய்வு செய்யவேண்டும். நாம் செய்கின்ற வேலை இறைவன் நமக்குத் தந்த கொடை, அல்லது கடமை என்பதை உணரவேண்டும். ஆம், அது ஓர் அழைத்தல்.

என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு (யோவா 4:36) என்றார் ஆண்டவர் இயேசு. அதுபோல, ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி, என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம் (தி.ப 20:24) என்று மொழிந்த பவுலடியாரின் சொற்களும் அதையே எடுத்துரைக்கின்றன. ஒருவர் தம் வேலையைச் செய்வதில் இன்பம் காண்பதே அவருக்கு நல்லது என்று கண்டேன். ஏனெனில் அவ்வேலை அவருக்கெனக் குறிக்கப்பட்டுள்ளது. (ச. உ 3:22) என சபை உரையாளர் கூறுகின்றார்.

### 2. "கடவுளுக்காகவே நாம் வேலை செய்யவேண்டும்"

எனவே கடவுள் நமக்குத் தந்த வேலையைக் கடவுளுக்காகவே நாம் செய்யவேண்டும். நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல, ஆண்டவருக்காகவே செய்கிறீர்கள் என்பதை உணர்ந்து உளமாரச் செய்யுங்கள்" (கொலோ 3:23-24) என்கிறார் பவுலடியார். மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு வேலை செய்வதாகக் காட்டிக் கொள்பவர்களாயிராமல், கிறிஸ்துவின் பணியாளராய்க் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள். மனிதருக்காக அன்றி கடவுளுக்காகவே செய்வது போல நல்மனத்தோடு வேலை செய்யுங்கள் (எபே 6:6-7) என்றும் அவர் கூறுகிறார். வேலைகளை எப்படிச் செய்வது? நமது வேலைகளை நாம் எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கான பல பரிந்துரைகளை விவிலியம் நமக்குத் தருகிறது.

### 3. குறித்த காலத்திற்கு முன்பே

உங்கள் பணிகளைச் செய்து முடியுங்கள். அவ்வாறாயின், குறித்த காலத்தில் கடவுள் உங்களுக்குப் பரிசு வழங்குவார் (சீ.ஞா 51:30) என்னும் அறிவுரை கால மேலாண்மையின் படி கடமையாற்றப் பணிக்கிறது.

### 4. நம்பிக்கைக்குரியவராய்

"நம்பிக்கைக்குரியவரும், அறிவாளியுமான பணியாளர் யார்? தலைவர் வந்து பார்க்கும்போது தம் பணியைச் செய்துகொண்டிருப்பவரே அப்பணியாளர். அவர் பேறுபெற்றவர்" (மத் 24:45-46).

யாரும் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் நமது கடமைகளை நாம் ஆற்றவேண்டும். அத்துடன், சிறிய பணிகளையும் நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். அது நம் நம்பகத்தன்மையை அதிகரிக்கும். சிறிய பொறுப்புக்களில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய எனது மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும் (மத் 25:21-23) என்ற செய்தியை இயேசுவின் தாலந்து உவமையில் காண்கிறோம்.

### 5. மன மகிழ்ச்சியுடன்,

கட்டாயத்தினால் அல்ல, கடவுளுக்கேற்ப மன உவப்புடன் மேற்பார்வை செய்யுங்கள். ஊதியத்திற்காகச் செய்யாமல், விருப்போடு பணிசெய்யுங்கள் (1 பேது 5:2) என்னும் அறிவுரை நம்மை மனமகிழ்வுடன் பணியாற்ற அழைக்கிறது. சில வேளைகளில் நமது வேலைகள் வீணாகிவிடுமோ, நமது பணிகளை நமக்குப் பின் வருபவர்கள் தொடர்வார்களோ என்னும் ஐயம் நம்மை வாட்டலாம். இதோ, ஆறுதல் தருகிறது இந்த இறைவார்த்தை, ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண்போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள் (1 கொரி 15:58)

### 6. பாராட்டை, பலன்களை எதிர்பாராமல் :

நம்மில் சிலர் நமது பணிகளுக்குப் பாராட்டையும், ஏற்பிசைவையும் எதிர்பார்க்கிறோம். அவை கிடைக்காவிட்டால், சோர்ந்து போகிறோம். இயேசு தம் சீடர்களுக்குத் தந்த அறிவுரை நம்மை நெறிப்படுத்துகிறது. உங்களுக்குப் பணிக்கப்பட்ட யாவற்றையும் செய்த-பின், நாங்கள் பயனற்ற பணியாளர்கள். எங்கள் கடமையைத்தான் செய்தோம் எனச் சொல்லுங்கள் (லூக் 17:10). எனவே, நமது பணிகளைப் பிறர் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும், நாங்கள் எங்கள் கடமையைச் செய்தோம் என்னும் ஒரே மனநிலையைக் கொண்டிருப்போம்.

### 7. சோம்பல் கொள்ளாமல் :

உழைப்பின் எதிரி சோம்பல். சோம்பேறி தனது கடமையைச் செய்யாமல் தவறுவதுடன், பிறருடைய வேலையையும் கெடுக்கிறான். இது பற்றித் தொடக்கத் திருச்சபையினருக்கு பவுலடியார் தந்த அதட்டலான கட்டளை நம் கண்களைத் திறக்கின்றது. உங்களுள் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாகச் சுற்றித் திரிந்து, பிறர் வேலைகளில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறோம். இத்தகையோர் ஒழுங்காகத் தங்கள் வேலையைச் செய்து, தங்கள் உணவுக்காக உழைக்கவேண்டும் என ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் கட்டளையிட்டு அறிவுறுத்துகிறோம். (2தெச 3:11-12).

### 8. நமது திறமைகளில் நம்பிக்கை கொள்ளாமல் :

நமது சொந்தத் திறமையினால் நாம் சாதனைகளும், வெற்றிகளும் அடையலாம் என்பது இறையியல் அறியாமை. மனிதர் விரும்புவதாலோ, உழைப்பதாலோ எதுவும் ஆவதில்லை. கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது (உரோ 9:16) என்னும் இறைவார்த்தை நம்மை விழித்தெழச் செய்யட்டும்.

உண்மையில் நானாக உழைக்கவில்லை, என்னோடிருக்கும் கடவுளின் அருளே அவ்வாறு உழைக்கச் செய்தது (1கொரி 15:10) என்று உணர்ந்தார் பவுலடியார். இரவு முழுதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும், உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன் (லூக் 5:5) என்னும் சீமோனின் அனுபவமும் அதையே வலியுறுத்துகிறது.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## கொழும்பு செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கின் தவக்கால திருயாத்திரை







கொழும்பு செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கு இவ்வருட தவக்கால ஒரு நாள் திருயாத்திரையை கடந்த போயா தினம் குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகம எனும் இடத்தில் சிலுவைப்பாதை தியானத்தை மேற்கொண்டனர். இத்தவக்கால சிலுவைப்பாதைகளை அருட்தந்தையர்கள் வழிநடத்தினார்கள். பங்குகளிலிருந்து அலகுகளும் ஏனைய பொதுமக்களும் இத்தவக்கால திருயாத்திரையில் பங்குபெற்று பயன்பெற்றனர்.

தகவல் மற்றும் படங்கள் : டிக்சன் பர்னாந்து.

# இன்றே நீ திரும்பி வா!

2019ம் ஆண்டின் தவக்காலம் நிறைவடைய இன்னும் இரண்டு கிழமைகள்தான் எஞ்சி இருக்கின்றன. இதுவே இறைவனின் அருளின் காலம். அவருக்கு ஏற்புடைய நாள் என்று தவக்காலத்தின் முதல் நாளிலேயே இறைவன் குரலைக் கேட்டோம். கடந்த நான்கு வாரங்களாக செபம், தவம், தர்மம் அகிய மூன்று அறிவுரைகளை கடைப்பிடித்திருப்போம். வாழ்த்துக்கள். இன்று இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் உரிய ஓர் அருளடையாளத்தைப் பற்றி எழுத அனுமதி தாருங்கள். அதுதான் ***ஒப்புரவு*** என்னும் அருள் அடையாளம்.

***பாவ சங்கீர்த்தனம்; என்னும் பாவ அறிக்கை*** என்று நாம் குறிப்பிடும் ***ஒப்புரவு*** அருளடையாளம் மனத்துயர், பாவப்பரிகாரம், உடைந்த உறவைப் புதுப்பித்துக்கொள்தல் ஆகிய முக்கியமான செயல்களை வலிவுறுத்துகிறது.

தவக்காலம் ஒப்புரவினை மையப்படுத்துகிறது. இறைவனோடு, அயலாரோடு, தன்னோடு, பிரபஞ்சத்தோடு ஒப்புரவாகுவது இவ் ஒப்புரவு செயலை தான் நாம் அருள் அடையாளத்தில் கொண்டாடுகின்றோம். ஒப்புரவாகுதல் மூன்று படி நிலைகளின் செயல்பாடு அதாவது

**அ. தவறுகளுக்கு மனம் வருந்துதல்**

**ஆ. தவறுகளுக்கு பொறுப்பேற்பது**

**இ. அதற்கானப் பரிகாரம் ஆகியவற்றை உள்ளடக்கியது.**

கடந்த ஞாயிறு தின நற்செய்தியின் ஒளியில் இதனை புரிந்து கொள்ள முயற்சிப்போம். கடந்த ஞாயிறு நமக்கு நன்கு பரிச்சயமான காணாமற்போன மகன், அல்லது ஊதாரிப் பிள்ளையின் உவமையைப் பற்றி தியானித்தோம். இன்று இந்த உவமையை ஊதாரித் தந்தையின் உவமையாக படம் பிடித்துக் காட்டுகிறார்கள். ***ஊதாரி*** என்னும் சொல் தரும் அர்த்தம் என்ன? தன்னிடம் உள்ளவற்றை எதிர்காலத்தை யோசிக்காமல், பின் விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல், வீண் விரயம் செய்யும்' ஒருவரை ஊதாரி என்போம். தனக்கு கிடைத்த சொத்தை தாறுமாறாய் செலவு செய்த இளையமகன் ஊதாரி என்றால், தன் முதிர் வயது, முதிர் காலத்தில் தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாமல் தன் சொத்தை பகிர்ந்தளித்த தந்தையும் ஊதாரி தானே. தன் சொத்தை எல்லாம் அழித்துவிட்டு திரும்பி வந்த மகனை எவ்வித நிபந்தனையும் இல்லாமல், தலைகால் புரியாமல், அவன் மீது அன்பு காட்டும் தந்தையை ஊதாரி என்று தானே சொல்ல வேண்டும்.

**இறந்துபோன நான் உயிர்பெற்றெழ ஒப்புரவை நாடிசெல்ல வேண்டும். தொலைந்து போனவை கிடைக்கப்பெற ஒப்புரவை தேடிச் செல்ல வேண்டும்.**

இளைய மகன் தன் சொத்துக்களை எல்லாம் எடுத்துக்கொண்டு தொலைநாடு செல்கிறார். அவர் தந்தையை விட்டு தொலைதூரம் போகிறார். நானும் இறைத்தந்தையை விட்டுதொலைதூரம் போகிறேன் என் பாவத்தின் விளைவு இது. அங்கு தாறுமாறாக வாழ்வது அசிங்கமான வாழ்வு. அதாவது பிழையான வாழ்க்கை முறை, என் வாழ்க்கை முறை எப்படியாக அமைந்துள்ளது? பஞ்சம், வறுமை ஆபத்தை உணர்த்துகிறது. தந்தையிடமிருந்து பிரிந்து வேற்றிடத்தில் அடைக்கலம் தேடுதல். எனது வாழ்வில் இறைவனுக்கு உரிய இடத்தை கொடுக்க மறந்து, பணம், பட்டம், பதவி, அந்தஸ்துகளில் அடைக்கலம் அடைந்தேனா? மகனாக இருந்தவர் இப்போது வேலை ஆளாக மாறுகிறார். முதலாளி தொழிலாளியாக மாறுகிறார். இஸ்ரயேல் பன்றிகளை வெறுக்க, இவர் பன்றிகளை மேய்க்கின்றார். பன்றிகளின் உணவு கூட இவர்க்கு இல்லை. ஏன்னே இவரின் இழிநிலை. என் பாவ வாழ்வு எனக்கு இத்தகைய இழிநிலையைத்தான் கொண்டு வரும்.

அடுத்து இளைய மகனின் பாவப் பரிகாரச் செயற்பாடுகளைக் காண்கின்றோம்.

**அ. தன் பாவ நிலையை உணஉகிறான்.**

**ஆ. தன் தவறுகளுக்கு பொறுப்பேற்கின்றான்.**

**இ. பாவத்தை அறிக்கையிட்டு பரிகாரம் தேடுகின்றான்.**

[லூக் 15:17-19]



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து. அ.ம.தி

அவர் அறிவு தெளிந்தவராய், என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்' இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன் உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லிக்கொண்டார்.

இப்போது தந்தையின் செயல்பாடுகளை சற்று நோக்குவோம். தொலைவில் காணல், பரிவு, கொள்ளல், ஓடிப்போதல், கட்டித் தழுவுதல், முத்தமிடல். இவைகள் இறைத்தந்தையின் அன்பின் ஆழத்தை, அகலத்தை, நீளத்தை அளவிட முடியாதது என்பதன் அடையா-ளங்கள். மகன் பாவமன்னிப்பு செய்வதில் கருத்தாய் இருக்க, தந்தை அதில் ஈடுபாடு காட்டவில்லை. தந்தை மகனை பார்க்கின்றார், அவனுடைய பாவத்தை அல்ல, தந்தை பயணியாளர்களுக்கு கட்டளை இடுகிறார். முதல்தரமான ஆடை, மோதிரம், மிதியடி, ஆகியவைகளை மகனுக்கு அணிவிக்க. இவை மகனின் மாண்பினை குறித்துக் காட்டும் அடையாளங்கள். கொழுத்த கன்று, விருந்துக்கு அடையாளம் மகனின் வருகை விருந்தாகிறது. காரணம் இறந்திருந்தான் உயிர்பெற்றான், காணாமல் போயிருந்தான் கிடைத்துள்ளான்.

ஆம் ஒவ்வொரு ஒப்புரவு அருள் அடையாள கொண்டாட்டத்தின்போது நிகழ்வது இதுவே. என் பாவங்களுக்காக நான் மனம் வருந்தி இறைத்தந்தையிடம் திரும்பும்போது, மேற்கூறியவை என் வாழ்விலும் இடம்பெறும். இவ்வருள் அடையாளம் உறவுக்குப் பாலம் கட்டுகிறது. நம் உள்ளங்களை மகிழ்ச்சியால் நிரப்புகிறது. இறந்துபோன நான் உயிர்பெற்றெழ 'ஒப்புரவை' நாடிசெல்ல வேண்டும். தொலைந்து போனவை கிடைக்கப்பெற 'ஒப்புரவை' தேடிச் செல்ல வேண்டும். ஆகவே இக்காலத்தை பயன்படுத்துவோம்.

## புனித லூயி தெ மோன்போர்ட்!

**இம்மாதப் புனிதர்**

1672இல் பிரான்சில் ஏழையாகப் பிறந்தவர் மோன்போர்ட். எப்போதும் நற்கருணை முன் செபிப்பது இவருக்கு ரொம்பப் பிடிக்கும். தங்கையுடன் செபமாலை செபிப்பார். 12 வயதில் ரென் நகரில் இயேசு சபை கல்லூரியில் சேர்ந்தார். வகுப்புக்களுக்கு முன்னரும், பின்னரும் ஆலயம் சென்று செபிப்பார்.

பக்தி சபையில் சேர்ந்து ஏழைகள், நோயாளிகளுக்கு சேவை செய்தார். அவர்கள் உணவருந்தும் போது ஞான நூல்கள் வாசிப்பார். 19 வயதில் இறையியல் பயில பாரிசு நகருக்கு நடந்து சென்றார். பயணத்தில் பணத்தையும், உடைகளையும் ஏழைகளுக்குக் கொடுத்தார். பிச்சை எடுத்துப் பிழைக்க உறுதியெடுத்தார். 27 வயதில் குருப்பட்டம் பெற்று மருத்துவமனையில் பணியாற்றினார். போதிக்கத் தொடங்கினார். 17 ஆண்டுகளில் நகரங்கள், கிராமங்களில் நற்செய்தி போதித்தார். தூய ஆவியாரின் கனிகள், கொடைகள், வரங்கள் நிரம்பியவராய் நாவன்மையுடன் எளிய வார்த்தைகளில் கடவுளின் பேரன்பு என்ற நெருப்பு பொங்கி ததும்புமாறு போதித்தார். இடைவிடா செபம், ஏழைகளிடம் பரிவன்பு, அசிசியார் - கிளாரா கடைப்பிடித்த அதே வறுமை வாழ்வு, கிழிசலும், கந்தையுமான உடுப்பு, துன்பமைந்தாலும், இழிவுபடுத்தப்பட்டாலும் அக மகிழ்ச்சி... இவைகளே புனிதரின் வாழ்வு நெறிகள் ஒரு கட்டத்தில் பிச்சைக்காரன், பைத்தியக்காரன் என்று கூறி விரட்டப்பட்டார்.

லா ரோ ஷெல் என்ற நகரில் படைவீரர்களுக்கு தியானம் வழங்கினார். புனிதரின் வார்த்தைகள் வீரர்களின் இதயங்களை ஊடுருவின. அழுது புலம்பி உரத்தக் குரலில் பாவ மன்னிப்புக்காகக் கதறினர். இறுதி பவனியில் தளபதி காலணி அணியாமல் கொடியேந்தி முன்னே செல்ல வீரர்களும் காலணி அணியாமல் ஒரு கரத்தில் சிலுவையும், மறு கரத்தில் செபமாலையும் ஏந்தி துதிப்பாடல்களைப் பாடிக் கொண்டே சென்றனர். மறை எதிர்ப்பாளர்களுக்கு ஒரே எரிச்சல். மறைமாவட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார். சூப்பில் விஷம் கலந்தனர். மாற்று மருந்து அருந்தினார். உடல் பலவீனமானது. புனிதர் செல்லும் வழியில் கொல்லக் காத்திருந்தனர். இறையருளால் உணர்த்தப்பட்டு வேறு சாலையில் சென்றார். திருத்தந்தை 11ஆம் கிளமென்ட் வழங்கிய சிலுவையை மக்களுக்கு முத்தமளிக்கக் கொடுப்பார். **இதோ, உன் மீட்பர். பாவத்தால் அவரை நோகச் செய்ததற்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்க மாட்டாயா?** எனக் கேட்பார். இதயம் நொறுங்குண்டு கண்ணீர் சிந்தி பாவ மன்னிப்பு வேண்டினர். உங்களை மனமாற்றியது மீட்பர் இயேசுவே என்பார்.

அன்னை மரியா அடிக்கடி இவருக்குக் காட்சியளித்தார். அன்னை மரியா மீதும், செபமாலை மீதும் மிகுந்த பக்தி இவருக்கு உண்டு. மாதாவின் தூ தன் என்று இவருக்குப் பெயரும் உண்டு. **இறையருளால் நீங்கள் ஏற்கனவே செபிப்பதில் ஓர் உயர்ந்த நிலையை அடைந்திருந்தால் அந்நிலையை தக்க வைத்துக்கொள்ளவும், தாழ்ச்சியில் மேலும் வளரவும் தொடர்ந்து செபமாலை செபியுங்கள். தினமும் செபமாலை செபிப்பவர் எவரையும் எந்தத் தீயச் சக்தியும் அலைக்கழிக்க முடியாது. இதை மிக்க மகிழ்ச்சியுடன் என் இரத்தத்தால் கையொப்பமிட்டுத் தருகிறேன்** என்பார். திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்துக் கொள்வதும், அன்னை மரியாவுக்கு அர்ப்பணம் செய்து கொள்வதும் ஒன்றுதான் என்பார். "கன்னி மரியா உண்மையான பக்தி" என்ற நூலில் மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆன்மாக்களின் திரளான படை மரியா சாத்தான் மேல் வெற்றிக் கொள்ள மரியாவின் கருவியாகச் செயல்படும்" என இறைவாக்கு உரைக்கிறார்.

மரிக்கும் முன் Sisters of Divine Wisdom என்ற துறவற சபையை நிறுவி மருத்துவமனைப் பணிக்காகவும், ஏழைப் பெண்கள் கல்விப் பணிக்காகவும் இச்சபையை அர்ப்பணித்தார். போதகப் பணிக்காக Company of Mary என்ற மற்றொரு சபையையும் அர்ப்பணித்தார். திருத்தந்தை 11ஆம் கிளமென்ட் மோன்போர்ட்டை அப்போஸ்தலிக்க போதகர் என்று அழைத்தார். சித்திரை 28, 1716இல் மரித்து விண்ணகம் சேர்ந்தார். திருத்தந்தை 12ஆம் பயஸ் 1947இல் இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார்.

## 01 பாடசாலைகளில்...

எதிர்பார்ப்பதோடு, கத்தோலிக்கர்களாக இருந்து நாம் செய்யும் இப்பணியானது, எம் எதிர்கால பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதாக அமைவது உறுதி.

வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை வாசித்து, மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும். அல்லது கத்தோலிக்க கல்விப் பணியகத்தைத் தொடர்புகொள்ளவும்.

**கத்தோலிக்க கல்விப் பணியகம், ஆயர் இல்லம், கொழும்பு 08, தொலைபேசி இல - 011-2699129**

## 01 புனித வாரத்திற்குரிய...

சுகுமார் கடை கொச்சிக்கடை, கத்தோலிக்க புத்தகசாலை பொரள்ளை, கிளரேசியன் புத்தகசாலை வெலிசர, வழிபாடு காரியாலயம் ஆயர் இல்லம் பொரள்ளை, தேசிய வழிபாடு திணைக்களம் பல்கம பிளேஸ் கொட்டா நோட் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். மூன்றும் ரூபா 800/-

**தகவல் : அருட்பணி. இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம்.**

## 01 இலங்கை மக்களின்...

கோட்டே புனித தோமஸ் ஆலயத்தில் பிரபல பாடகிக்கான இரங்கல் அஞ்சலி செலுத்திய அதி.மேதகு கர்தினால் ரஞ்சித் அவர்கள் கூறினார்கள்.

தனது இனிமையான குரலினால் இலங்கை மக்கள் பலரின் மனதைக் கவர்ந்த அஞ்சலின் குணதிலக்க அவர்கள் மக்களின் மனதில் என்றும் வாழ்கிறார் என்றும் சங்கீத துறையில் உச்சத்தைத் தொட்டவர். இவர் பாடிய பாடல்களைக் கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரின் நினைவு எம்மை ஆட்கொள்ளும் எனவும் அவர் பெற்ற தாலந்து பற்றி இறைவனுக்கு எந்நேரமும் நன்றி தெரிவிக்கும், அவருக்குள் இருந்த எளிமையான உள்ளாழ அமைதினால் எமது எடுத்துக்காட்டாக திகழ்ந்தார் என தொடர்ந்து உரையாற்றுகையில் கொழும்பு அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கூறினார்.

### சுமைகளெல்லாம் சுமையல்ல

புத்தகங்களை சுமையாக நினைத்தால்
- அறிவை பெறமுடியுமா

செருப்பை சுமையாக நினைத்தால்
- சுகமாக நடக்க முடியுமா

முற்களைச் சுமையாக நினைத்தால்
- பூக்கள் பூக்க முடியுமா

சேவைகளை சுமையாக நினைத்தால்
- மாற்றங்கள் நிகழ்த்த முடியுமா

சிலுவையை சுமையாக நினைத்தால்
- கிறிஸ்துக்கள் பிறக்க முடியுமா

**இவை எல்லாம்**
**சுமையல்ல சுமையென்பது**
**சுகம் என்று நினைத்தால்**
**சுகம் எப்போதும் உன் வாழ்வை**
**தொடர்ந்திடும்.**

## 02 இரத்தினபுரி...

குடும்ப செபம், திருவழிபாட்டு சடங்குகளை அர்த்தமுள்ளதாக நிறைவேற்றுவது மேலுமாக உண்மையான மனமாற்றத்துடன் இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் பங்கேற்க வழிவகுப்பது திருவழிபாட்டுக் குழுவின் பொறுப்பு என்பதனை ஆயர் தமது உரையின் போது வலியுறுத்தினார்.

**இரத்தினபுரி மறைமாவட்ட திருவழிபாட்டுக்குழுவின் செயலாளர் [எம். ஏ. சுலக்ஷனா]**

## 10 விவிலியப் பகுதி விடைகள்

**76.** நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக [8:3]
**77.** மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையை செலுத்துவது [8:4]
**78.** நூற்றுவத் தலைவர் [8:5]
**79.** முடக்குவாதம் [8:6]
**80.** நூற்றுவத் தலைவர் [8:8]
**81.** நூற்றுவத் தலைவர் [8:10]
**82.** கிழக்கிலும், மேற்கிலுமிருந்து வருபவர் [8:11]
**83.** காய்ச்சல் [8:15]
**84.** மறைநூல் அறிஞர் ஒருவர் [8:19]
**85.** மறைநூல் அறிஞரிடம் [8:20]
**86.** மக்களெல்லோரும் [8:27]
**87.** கதரேனர் வாழ்ந்த பகுதி [8:27]
**88.** முடக்குவாதமுற்றவன் [9:2]
**89** மறைநூல் அறிஞர்கள் சிலர் [9:3]
**90.** மத்தேயு [9:9]

## 12 கிறிஸ்து....

**அறிவுரை மடலின் 9 பிரிவுகள்**

"கிறிஸ்து உயிரோடு இருக்கிறார், அவர் இளையோரையும் உயிரூட்டம் கொண்டிருக்கும்படி கேட்கிறார்" என்ற விண்ணப்பத்துடன் தொடங்கும் இம்மடல், ஒன்பது பிரிவுகளைக் கொண்டுள்ளது. இளையோரைக் குறித்து கூறப்படும் விவிலியப் பகுதிகளை தன் முதல் பிரிவில் எடுத்துக்காட்டுகளுடன் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "இயேசு என்றும் இளமையானவர்" என்ற தலைப்பில், இயேசுவின் இளமைப்பருவ நிகழ்வுகள் தரும் படிப்பினைகளை, இரண்டாம் பிரிவில் முன்வைத்துள்ளார்.

**இளையோர் இவ்வுலகின் நிகழ்காலமும், வருங்காலமும்**

"இளையோர் இவ்வுலகின் வருங்காலம் மட்டுமல்ல, அவர்களே, இவ்வுலகின் நிகழ்காலம்" என்ற தலைப்பில் மூன்றாவது பிரிவைத் தொடக்கும் திருத்தந்தை, இளையோருக்குச் செவிமடுக்கவேண்டிய கடமையைக் குறித்து, இப்பிரிவில் வலியுறுத்தியுள்ளார்.

"கடவுளே அன்பு", "கடவுள் உங்கள் மீது அன்புகூர்கிறார் என்பதில் ஐயம் கொள்ளாதீர்கள்", "தந்தையாம் இறைவனின் அரவணைப்பில் பாதுகாப்பை கண்டுணருங்கள்" என்ற மூன்று கருத்துக்களை தன் நான்காவது பிரிவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்.

**கனவுகள் காண தூண்டும் இறைவன்**

கனவுகள் காண இறைவன் தடைவிதிப்பதில்லை, மாறாக, ஊக்கம் அளிக்கிறார் என்ற கருத்தை, "இளையோரின் பாதைகள்" என்ற 5வது பிரிவிலும், எவ்வித வரலாற்றுப் பின்னணிகளையும், முத்தவர்களின் அனுபவங்களையும் ஏற்றுக்கொள்ளாமல், வருங்காலத்தைக் கட்டியெழுப்பத் துடிக்கும் இளையோரின் நிலைகுறித்து தான் வருத்தமடைவதாக, 6ம் பிரிவிலும் விவரித்துள்ளார், திருத்தந்தை. மேலும், இம்மடலின் 7ம் பிரிவு, "இளையோர் மேற்கொள்ளும் மறைப்பணிகள்" குறித்தும், 8ம் பிரிவு, "இறையழைத்தல்" குறித்தும், 9ம் பிரிவு, "இளையோரின் தேர்ந்து தெளிதல்" குறித்தும், எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கின்றன.



## மணமகன் தேவை

யாழ் / றோமன் கத்தோலிக்கம், 1989 (B.S.C. Homors) M.B.A. Sotware Engineer ஆக கொழும்பில் பணியாற்றும் மகளுக்கு நற்குணமுடைய Doctor, Engineer, Accountan, Bankஇல் பணிபுரியும் உயர்கல்வித் தகமையுடைய மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (உள்நாடு / வெளிநாடு விரும்பத்தக்கது)

**தொடர்புகளுக்கு : 0777917660, 0777973443** (N6467)

கொழும்பில் பிறந்த 26 வயதுடைய பிரபல பாடசாலையில் ஆசிரியராக கடமைபுரியும் கத்தோலிக்க மகளுக்கு நல்ல கத்தோலிக்க குடும்ப பின்னணி உள்ள படித்தவ மணமகன் தேவை.

**தொடர்புகளுக்கு : 0755-708174** (N6297)

## 04 துன்பம் மனித வாழ்வின்...

சாவைத் தவிர்க்க முயல வேண்டும். ஆனால், தீராத நோய்கள் நம்மை வேதனையில் ஆழ்த்தும் பொழுது அதனைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளலாம். அல்லது பிறருக்காக, நீதிக்காகப் போராடும்போது துன்பம் வந்தால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்கலாம். அது கிறிஸ்துவின் பாடுகளில் குறைவாயுள்ளதை நிறைவாக்கி (கொலோ 1:24) மனித குலத்திற்கு மீட்புத் தரும் பாலமாகவும் அமையலாம்

**5. துன்பம் ஒரு மறைபொருள்**

இறுதியாக துன்பம் பற்றிய எல்லாக் கேள்விகளுக்கும் நம்மால் முழுமையான பதிலைத் தரமுடியாது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறக்கும்போதே எய்ட்ஸ் நோயுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு அத்துன்பம் ஏன்? திருமணமான அன்றே விபத்தில் மணமக்கள் கொல்லப்படுவது ஏன்? இயற்கையின் சீற்றத்தால் அப்பாவி மக்கள் வீடு வாசல் இழப்பது ஏன்? இவை போன்ற இன்னும் பல கேள்விகள் நம் மனதில் தோன்றி, நம் இறை நம்பிக்கையை கேள்விக்கு உட்படுத்துகின்றன. ***இத்தகைய கோரமான, கொடுமையான துன்பங்களை அன்பே உருவான இறைவன் ஏன் அனுமதிக்கிறார்*** என்னும் கேள்வி எல்லாருக்கும் ஏதேனும் ஒரு நேரத்தில் எழத்தான் செய்யும்.

இதற்கு முழுமையான பதில் இல்லை. இறைவன், மீட்பு, அன்பு, காதல் போல துன்பமும் ஒரு **மறைபொருள்** தான் (mystery). அதனை இவ்வுலகில் நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. மறுவாழ்வில் தான் துன்பத்துக்கும் நமக்கும் முழு விளக்கம் கிடைக்கும். ***இப்போது நான் அரைகுறையாய் அறிகிறேன்; அப்போது கடவுள் என்னை அறிந்துள்ளதுபோல் முழுமையாய் அறிவேன்*** (1கொரிந் 13:12) அதுவரையில் ***உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்*** (யோவான் 16:29) என்னும் அருள்நாதர் இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.

## 13 பணியால்....

**9. உழைப்பது பகிர்வதற்கே :**

பாடுபட்டு உழைத்து, நலிவுற்றோருக்குத் துணை நிற்கவேண்டும் (தி.ப 20:35) என்பதே நமது உழைப்பின், வேலையின் நோக்கம். தேவையில் உழல்வோருக்குப் பகிர்ந்துகொடுக்க தங்களிடம் பொருள் இருக்கும் வகையில் தாங்களே தங்கள் கைகளால் நேர்மையோடு பாடுபட்டு உழைக்கட்டும் (எபே 4:28) என்றார் பவுலடியார். இந்த இறைவார்த்தை, உழைப்பை தனி மனிதத் தளத்திலிருந்து, சமூகத் தளத்திற்கு உயர்த்தி, ஆன்மீகத்தின் உச்சத்திற்கு இட்டுச் செல்கிறது.

**10. இறைவனை மாட்சிமைப்படுத்த :**

நமக்குத் தரப்பட்டுள்ள வேலைகளை நன்றாகச் செய்வது இறைவனுக்கு நாம் செலுத்தும் மிகச் சிறந்த வழிபாடு என்னும் செய்தியை இயேசுவே நமக்குத் தருகிறார். நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்துமுடித்து, நான் உம்மை மாட்சிமைப்படுத்தினேன் (யோவா 17:4). அவரே நம்மிடம் நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே தந்தைக்கு மாட்சி அளிக்கிறது (யோவா 15:8) என்றும் மொழிந்துள்ளார்.

எனவே, நமது பணிகளை, வேலைகளை நன்கு ஆற்றி, இறைவனைப் பெருமைப்படுத்துவோம். அதுவே இறைவனுக்கேற்ற சிறந்த செபம்.

# எருசலேம் நகரம் மும்மதங்களுக்குப் பொதுவான நகரம்

மன்னரின் மாளிகைக்குள் திருத்தந்தை நுழைந்ததும், அவருக்கு, அரச மெய்க்காப்பாளர் படை, அணிவகுப்பு மரியாதை செலுத்தியது. இதைத் தொடர்ந்து, அரச குடும்பத்தினர், திருத்தந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். திருத்தந்தையும், மன்னரும் ஒருவருக்கொருவர் நினைவுப் பரிசுகளைப் பகிர்ந்துகொண்ட பின்னர், இருவருக்கும் இடையே, தனி அறையில் சந்திப்பு நிகழ்ந்தது. இச்சந்திப்பில், ஒரு முக்கிய நிகழ்வு இடம்பெற்றது. ஆம், மன்னர் 6ம் முகம்மது அவர்களும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், இணைந்து, எருசலேம் நகரைக் குறித்த ஓர் அறிக்கையை விண்ணப்பமாக வெளியிட்டனர்.

"எருசலேம் நகரின் தனித்துவம், அதன் ஆன்மீக முக்கியத்துவம், அமைதியின் நகரம் என்ற அதன் தனித்துவமான அடையாளம் போன்றவற்றை மனதில் கொண்டு, அந்நகரைக் குறித்து இந்த விண்ணப்பத்தை வெளியிடுகிறோம். மனித குலத்தின், குறிப்பாக, கடவுள் ஒருவர்தான் என்ற மத நம்பிக்கை கொண்ட மும்மதங்களின் பாரம்பரியக் கருவூலமாக விளங்கும் இந்நகர், கருத்துப் பரிமாற்றம், மற்றும், அமைதி உடன் வாழ்வு ஆகியவற்றின் இடமாக விளங்கி, ஒருவருக்கொருவர் மதிப்பையும், உரையாடலையும் வளர்க்கும் தலமாக தொடரவேண்டும் என்று ஆவல் கொள்கிறோம். இதன் காரணமாக, இந்நகரின் பல்சமயப் பண்பும், ஆன்மீகப் பரிமாணமும், கலாச்சாரத் தனித்துவமும் பாதுகாக்கப்பட்டு, ஊக்குவிக்கப்படவேண்டும். கடவுள் ஒருவர்தான் என்ற மத நம்பிக்கை கொண்ட மும்மதங்களைப் பின்பற்றுவோரும் எருசலேம் வழிபாட்டுத் தலங்களை தரிசித்து, உலகில் அமைதியும், உடன்பிறந்த உணர்வும் நிலவ, இறைவனை நோக்கி செபங்களை எழுப்பும் சுதந்திரம் உறுதி செய்யப்படும் என்று நம்புகிறோம்" என்ற சொற்கள் அடங்கிய இந்த விண்ணப்பத்தில், மொராக்கோவின் மன்னர் 6ம் முகம்மது அவர்களும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் இணைந்து கையெழுத்திட்டு, வெளியிட்டனர்.

**அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...**

**மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...**

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்







## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடந்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடந்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

## திருமண சேவைகள்



- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


**தொடர்புகொள்ளுங்கள்**


இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


**பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.**

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |




அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்